அன்பளிப்பு
அமரர். ஆர். திருமலை. இ ஆ
GIFTED BY
TIRUMALAI I.A.S. (La

தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள்—16

# திருக்கோடிகா கல்வெட்டுக்கள்

பதிப்பாசிரியர்

நடன. காசிநாதன், எம்.ஏ.
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-600 113

1992

முதற் பதிப்பு—1992 ( 500 பிரதிகள் )
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 105

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY. MADRAS
LIBRARY.
Acc 10434
Date

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

417.7 0954 82
கோசி

திருக்கோடிகா கல்வெட்டுக்கள்

பதிப்பாசிரியர்

நடன. காசிநாதன், எம்.ஏ.
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

விலை: ரூ.

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# பதிப்பாசிரியர் உரை

தமிழகத்தின் வரலாற்றைத் தக்க சான்றுகளுடன் நிறுவுவதற்கு கல்வெட்டுக்கள் மிக முக்கிய சான்றுகளாக விளங்குகின்றன. தமிழகத்தில் கல்வெட்டுக்கள் கி. மு. 4-ம் நூற்றாண்டு முதல் காணப் படுகின்றன. அண்மைக் காலங்களில் பல புதிய கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாகப் பல்லவர் வரலாற்றில் சில மாறுதல்கள் செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆதலால் தமிழகத்தில் உள்ள கல்வெட்டுக்கள் அனைத்தையும் வெகு விரைவில் அச்சு ஏற்றி விடுதல் வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு அரசு பேரார்வத்துடன் இப்பணியைத் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை மூலமாக நிறைவேற்றி வருகிறது. இத்துறை இதுவரை சென்னை மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், தருமபுரி மாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்வெட்டுக் களைப் படியெடுத்து ஒவ்வொரு மாவட்டமாக அச்சாக்கி வருகிறது. சென்னை மாவட்டத்துக் கல்வெட்டுக்கள் "சென்னை மாநகர்க் கல்வெட்டுக்கள்" என்ற பெயரிலும், கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுக்கள் அம்மாவட்டத்தில் அடங்கியுள்ள அகத்தீசுவரம், கல்குளம், தோவாளை ஆகிய வட்டங்களின் பெயரிலும் வெளி வந்துள்ளன. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் காணப்படும் நடுகல் கல்வெட்டுக்களை மட்டும் இத்துறை படியெடுத்து "செங்கம் நடுகற்கள்" என்ற பெயரில் வெளி யிட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் காணப்பட்ட நடுகல் கல்வெட்டுக்களை "தருமபுரி கல்வெட்டுகள் (முதல் தொகுதி)" என்ற பெயரில் அச்சாக்கியுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் படியெடுத்துள்ள கல்வெட்டுக்களை அம்மாவட்டத்தில்அடங்கியுள்ள வட்டங்களின் பெயரில் வெளிக் கொணர்கிறது. இதுவரை நன்னிலம் கல்வெட்டுக்கள், திருத்துறைப்பூண்டி கல்வெட்டுக்கள் என்று வெளிவந்துள்ளன. தற்போது வெளியிடப்படும் இக் கல்வெட்டுக்கள் 'திருக்கோடிகா' கல்வெட்டுக்கள் என்ற பெயரில் வருவதாகும். இத்திருக்கோடிகாவில் மட்டும் 48 கல்வெட்டுக் கள் படி எடுக்கப்பட்டு அச்சாக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக் கள் முதல் பராந்தகன் காலம் முதல் கோப்பெருஞ்சிங்கன் காலம் முடிய காணப்படுகின்றன. இவற்றில் பல்லவர்களில் நந்திவர்மன் மற்றும் நிருபதுங்கன் கல்வெட்டுக்களும், சோழர்களான முதலாம் பராந்தகசோழன் உத்தமசோழன், முதலாம் இராசராசசோழன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் ஆகியோர் கல்வெட்டுக்களும்; பாண்டியர்களில்

கோமாறஞ்சடையன் கல்வெட்டுக்களும், கோ இளங்கோ முத்தரையர் கல்வெட்டுக்களும், காடவமன்னன் கோப்பெருஞ்சிங்கன் காலத்துக் கல்வெட்டுக்களும் அடங்கும். ஆதலால் இத்திருக்கோடிகாவின் கோயில் பல்லவர் காலம் தொட்டு காடவமன்னன் கோப்பெருஞ் சிங்கன் காலம் முடிய மிகச் சிறந்த நிலையில் விளங்கியிருக்கிறது என்பது புலனாகிறது.

திருக்கோடிகாவினுடைய கோயிலைப் பற்றியும் அங்கு நிலவிய சமுதாயச் சூழல் பற்றியும், இறை வழிபாடு பற்றியும், நில விற்பனை பற்றியும், நில அளவு பற்றியும் தெரிந்து கொள்வதற்கு இக் கல்வெட்டுக்கள் பெரிதும் துணை புரிகின்றன. மேலும் முதலாம் இராசராசன் காலத்திலேயே ''சூரிய தேவர் கோயில்'' என்று ஒரு கோயில் இவ்வூரில் இருந்ததுவும் தெரிய வருகிறது. இக்கல்வெட்டுக் களில் சில பொருட்களின் பெயர்கள் கருத்துச் செறிவோடு காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாகப் 'பிழையா நாழி'' என்ற ஒரு அளவுக் கருவியும், ''புதுவாய்க்கால் நின்று போந்த உட்சிறு வாய்க்காலுக்குக் கிழக்கு'' என்ற நில எல்லையும், ''தளி அர்ச்சிப்பான்'' என்று கோயில் வழிபாடு செய்பவரும், ''தீப்போர்க்குச் செம்பொன்'' என்று தீயில் புடம் போட்ட தங்கமும் குறிக்கப்படுவது கருத்தைக் கவருவதாக உள்ளன.

இவ்வூரில் முன்பு இருந்த பழமையான கோயிலை மாற்றி கற்கோயிலாக அமைக்கப்பெற்ற போது. முன்பு அக்கோயிலிலே காணப்பட்ட கல்வெட்டுக்களையெல்லாம் மீண்டும் புதிதாக அக்கோயிலில் கல்லில் வெட்டியிருப்பதும் இக்கல்வெட்டுக்கள் மூல மாக அறிய முடிகிறது. ஆதலால் பண்டை மக்கள் கல்வெட்டுக்களை முக்கிய ஆவணங்களாக போற்றிப் பாதுகாத்தார்கள் என்பது இதன் மூலம் உணர முடிகிறது.

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான சிறு கிராமங்களில் கூட இத்தகைய கல்வெட்டுக்கள் காணப்படுவது வரலாற்றுக்குப் புத்துயிர் ஊட்டுவதாக உள்ளது. ஆதலால் ஒவ்வொரு மாவட்டத்துக் கல்வெட்டுக்கள் என்ற அளவிலே பெரும் நூலாக இத்துறை பதிப்பித்து வந்ததை மாற்றி ஒவ்வொரு ஊரிலும் கிடைக்கக்கூடிய கல்வெட்டுக்களைத் தொகுத்துச் சிறு சிறு நூலாக வெளியிடலாம் என்று இத்துறை கருதுகிறது. அதன் முதல் கட்டமே இந்நூலாகும். இதனை விலை கொடுத்து வாங்குவது எளிதாக இருக்கும். இம் முயற்சிக்குத் தமிழக மக்களும், ஆய்வு வல்லுநர்களும் நல்ல வரவேற்பை நல்குவார்களென நம்புகிறோம். இந்நூல் சிறந்த முறையில் வெளிவருவதற்கு உதவிய துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் நன்றி.

நடன. காசிநாதன்
இயக்குநர்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 9 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க. தொ. XIX எண்: 114 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் முன்மண்டப வடபுற அதிட்டானப் பட்டிகை, குமுதப்படை.

குறிப்புரை: இது பழைய கல்வெட்டின் புதிய படி. மகேந்திரபன்மச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் திருக்கோடிக்காவில் இறைவர்க்கு, களக்குடி என்னும் சிற்றூரில் உள்ள நிலம் பத்துச் செய்யினை விற்று, இறையிலியாக்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. அந் நிலத்தில் நீர்பாய்வதற்குச் சில நெறிமுறைகளைச் சபையினர் செய்து கொடுத்தமையையும் பிற்பகுதி சுட்டுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ இதுவும் மொரு பழங்கல்படி, கோப்பரகேசரி பந்மற்க்கு யாண்டு ச காவது வடகரை . . .நாட்டு பிரம்ம[தேயம்] மகேந்திரபந்ம சதுர்வேதி மங்கல[த்]*து ஸபையோம் இன்னாட்டு

2 [திருக்]கோடிகாவில் சண்டேஸ்வரப் பெருமாளுக்கு இம்மகேந்திர பந்ம சதுர்வேதி[ம]*ங்கலத்து களக்கு[டி] . . . .தென்வா. . . . . ஸபையோம் பொதுநிலம் பத்துச் செய்யும் சந்திராதித்தவல் இறையி

3 லியாக விற்றுக் குடுத்ததுக்கு கீழ்பாற்கெல்லை ஆக்கிமுத்த . . . .த்தந் நிலத்துக்கு மேற்கு [இ]வ[ன்] நிலத்துக்]கேய் தெற்கும் வை . . . . ஸன் நாராயணன் தேவந் நிலத்துக்கு மேற்க்கும் ஐயக்கி இராமதேவனும் தம்பியு

4 . . . . ம் நிலத்துக்கு மேற்க்கும் இவ[ர்]*கள் நிலத்துக்கு வடக்கும் குரவச . . . . [தமன்] [நி]லத்[து]க்கு மேற். . .கெல்லை சோ[ழ வதிக்கும் ப] . . . . நிலத்துக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை ஆக்கி ஸ்ரீகுமாரனும் குடியூர் பெரிய ச

5 ன்மனும் இக்குடி அடிகள் நம்பி நிலத்துக்கும் கிழக்கும் வட பாற்கெல்லை களக்குடி வாய்க்காலுக்குத் தெற்கும் . . . . .இன்னான் கெல்லையிலும் உட்பட்ட நில[ம்] பத்துச் செய்யும் உண்ணில மொழிவின்றி மிகிதிக் குறை

6 மை யுள்ளடங்க விற்றுக் குடுத்தோம் குலைக்கீழ் வாய்க்கால் நின்றும் சாமந்தியின் மேல்பாடு கரைகொள்ள கலத்தால் வாய்க்கால் பெற்று வடக்கு நோக்கிச் சென்று பாயப் பெறுவி தாகவும் களக்குடி வாய்க்காலாற் பா

7 யவும் நீர்வாரவும் பெறுவிதாகவும் வாய்க்கால்கள் அடைத்து வாய்க்காலாறேய் அடைத்துப் பாய்த்தப் பெறுவதாகவும் இ**[த்ரவ்]யம்** அறக்கொண்டு விற்றுக் குடுத்தோம் **மகேந்திரபந்மச் சதுர்வேதி மங்கலத்து ஸபையோம்** இது பழய கல்ப

8 டி இந்த ஸ்ரீவிமாநத்திலே ஏறவெட்டிநமையில் முன்னி**வாஜகம்** வெட்டிக் கிடந்த தனிக்கல்லால் உபயோகம் இல்லாமையில் அது தவிர்ந்தது. இது **பந்மாயேஸ்வர ரக்ஷை உ.**

* * *

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | [3] |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. [909] |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 11 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| மன்னன் : | பராந்தக சோழன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் முன்மண்டப வடபுறச் செகதி.

குறிப்புரை: திருக்கோடிக்காவில் உடைய மஹாதேவர்க்கு விளிச்சங்கு இரண்டு ஊதுவதற்காக கொற்றக் குறும்பூருடையான் மாயன் இ(ச)டையன் என்பவர் நிலம் வழங்கியமை குறிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பழைய கல்வெட்டின் புதிய படி.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ இதுவுமொரு பழங்கல்படி. மதிரைகொண்ட கோப்பர கேசரி பந்மக்கு யாண்டு [௩]

2 ல் மஹாதேவற்க்கு கொற்றக்குறும்பூருடையான் மாயன் இ(ச)டையன் விளிச்சங்(க்)கு இரண்டினுக்கு .... .... ..... .... ற்க்கு தென்பாற்கெல்லை புதுவாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை கண்ணமங்கலத்து தென்

3 .... .... வடபாற்கெல்லை மேற்க்கு நோக்கிப் போன வாய்க்காலுக்குத் தெற்கும் இவ்விசைத்த பெரு நான்கெல்.... ...... . சந்திராதித்த வரை ..... ச்சங்(கு)கூதக் குடுத்தேன் மாய(ர)ன் இடையானேன். இது பழங்கற்படி இந்த ஸ்ரீ.

4 ........ ... வெட்டிக் கிடந்த தனிக்கல்லால் உபையோக மில்லாமையில் அது தவிந்தது. இது பன்மாயே[ஸ்வர ரக்ஷை]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 11 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 10 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ. க. தொ. XIII எண் : 127 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | இராசகேசரி | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் முன்மண்டப வடபுறக் குமுதம், செகதி.

குறிப்புரை: திருக்கோடிக்காவுடையாருக்கு மேற்காஞட்டைச் சார்ந்த சிறுகாட்டூருடையாரான மாசேனன்மாதன் என்பவர் 360 கலம் நெல் கொடையளித்துள்ளார். இந்நெல்லை நல்லாற்றூர் நாட்டு நரசிங்க மங்கலத்துச் சபையார் பெற்றுக் கொண்டு இந் நெல்லின் பலிசையால் திருவமுதுக்காக நித்தம் இருநாழிக் குத்தலரிசியும், விளக் கெரிக்க நித்தம் உழக்கு நெய்யும் வழங்கி வந்திருக்கின்றனர். இது பழைய கல்வெட்டின் புதிய படி.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ இதுவும் மொரு பழங்கல்படி கோவிராஜகேஸரி

2 பந்மக்கு யாண்டு ௰௧ திருக்கோடிக்காவில் மஹாதேவர்க்கு மேக்கா னாட்டுச் சிறுகாட்டூருடையாரான மாசேனன்மாதன் குடுத்த நெல்லு முன்னூற்று அறுபதின் கலம் இந்நெல்லுக் கொண்டே[ாம்] நல்லாற்றூர் நாட்டு நரசிங்க மங்கலத்து ஸபையோம் இந்நெல்லி

3 ன் பலிசையால் திருவ(ம்)முது குத்தல் நிசதி இருநாழி அரிசியும் திருவிளக்கு நிசதி உழக்கு நெய்யும் நொந்தா விளக்குமாசந்த்ரா காலமும் தளி அர்ச்சிப்பாற்க்கு இக் . . . . நாழியாலளந்து குடுப்போமாேனாம் நரசிங்கமங்கலத்து ஸபையோம் இதுபழய கல்ப்படி இந்த ஸ்ரீவிமாந

4 . . . . . . வாஜகம் வெட்டிக் கிடந்த தனிக்கல்லால் உபையோகம் இல்லாமையால் அது . . . . . . . . . .* . . . . . . .

* இறுதி வரியின் முதலும், முடிவும் புதிய கட்டடத்தால் மறைக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 28 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 934 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 12 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3அ |
| மன்னன் : | முதலாம் பராந்தக சோழன் | | |

இடம் : திருகோடிக்காவுடையார் கோயில் முன்மண்டப வடபுறச் செகதி.

குறிப்புரை: நொந்தா விளக்கெரிக்க தொண்ணூற்று [ஆறு] ஆடுகள் வழங்கியமை குறிக்கப் பட்டுள்ளது. இது பழைய கல்வெட்டு ஒன்றின் புதிய படி.

கல்வெட்டு :

1 [ஸ்வஸ்திஸ்ரீ இதுவு]மொரு பழங்கல்படி ஸ்ரீ மதிரை கொண்ட கோப்பர கேசரி பந்மக்கு யாண்டு உ௰அ ஆவது வடகரை நல்லாற்றூர் நாட்டு

2 ... ... .... ளக்கினுக்கு குடுத்த ஆடு தொண்ணூற்று [ஆறு] பேராடு. இது பழங்கல்படி இந்த ஸ்ரீவிமானத்திலே ஏறவெட்டினமை யில் முன்னிவ்வாஜகம் வெட்டி ...

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 13 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 13 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIII எண் : 238 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |
| மன்னன் : | கோவிராசகேசரி | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி வடசுவர், அதிட்டானப் பட்டிகை.

குறிப்புரை: பெரும்பிடுகு வஞ்சவதியரையனான நக்கன் செருவிடை என்பவன், நந்தவனம் அமைப்பதற்காக அரைக்கால் செய் நிலத்தினை விற்றுக் கொடுத்தான். அவனே திருக்கோடிக்காவான கண்ணமங்கலத்தில் வாழும், தற்சன்மன் மற்றும் அவன் தம்பியரிடை ஒரு மா நிலத்தினை விலைக்கு வாங்கி நந்தவனத்துக்கு நீர் இறைப் பார்க்குக் கொடையளித்துள்ளான். ஏற்கனவே இருந்த இரண்டு மா நிலமும் சேர்ந்து மூன்று மா நிலத்தினையும் சபையாரிடம் நந்தவனப்புறமாகக் கொடுக்க, அதனை அவர்கள் பெற்றுக்கொண்டு இறைகாத்துக் கொடுக்கச் சம்மதித்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது. இது பழைய கல்வெட்டு ஒன்றின் புதிய படி.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** இதுவும்மொரு பழங்கல்படி கோவிராஜகேசரி பந்மக்கு யாண்டு ௰௩ ஆவது மல்லிநாட்டு கழிந்த பெரும்பிடுகு வஞ்சவதியரை யனா(ன) நக்கன் செருவிடையேன் திருக்கோடிகா(ல்) மஹாதேவற்க்கு நந்தவானத்

2 துக்கு விலைக்கு குடுத்த நிலம் திருக்கோயில்லிலுடை அரைக்காற் செய்யும் நந்தவானம் இறைப்பாறக்கு நான் திருக்கோடிக்காவான கண்ணமங்கலத்துத் தற்சன்மநிடையும் தம்பியரிடையும் விலை கொண்ட

3 ஒருமா . . . . . . . . .திருக்கோடிக்காவுடையாற்க்கு விற்று விலை கொண்டோம் ஸபையோம் பொதுவான இரண்டு மாவும் நந்தவானப் புறமாகக் குடுத்தேன் நக்கன் செருவிடையேன் இம்மூன்று மாவும் எப்பேற்பட்ட இறையும்

4 சந்திராதித்தவல் காத்துக்குடுப்போமானோம் கண்ணமங்கலத்து ஸபையோம் இது பழயகல்படி இந்த ஸ்ரீவிமாநத்திலே ஏற வெட்டினமையில் முன்னிவாஜகம் வெட்டிக்கிடந்த தனிக்கல்லால் உபையோகம்

5 இல்லாமையால் அது தவிர்ந்தது. பன்மாயேஸ்வர[கடைகூட்டப்] பெற்றார் ஸ்ரீபாதமென் தலைமேலிந.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 17 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 14 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | முத்தரையர் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |
| மன்னன் : | கோவிளங்கோ முத்தரையர் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி வடசுவர்க் குமுதம்.

குறிப்புரை: திருக்கோடிக்காவில் மகாதேவர்க்கு நொந்தாவிளக்குக்காகக் காரைக்காட்டுக் கல்லாற்றூர் கண்டன் பிராட்டி 15 செம்பொன் வழங்கியிருக்கிறார். இப்பொன்னின் வட்டியிலிருந்து தளி அர்ச்சிப்பார்க்கு நித்தம் உழக்கு நெய்யினை நல்லாற்றூர் நாட்டுத் தேவதான ஆதிசபையார் வழங்கி வந்ததை இக்கல்வெட்டுக் குறிக்கிறது. இது பழைய கல்வெட்டு ஒன்றின் புதிய படி.

**கல்வெட்டு :**

1 **ஸ்வஸ்திஸ்ரீ** இதுவும்மொரு பழங்கல்படி கோவிளங்கோ முத்த

2 ரையர்க்கு யாண்டு ௰எ ஆவது திருக்கோடிக்காவில் மஹாதேவர்க்கு நொந்தாவிளக்கினுக்குக் காரைக்காட்டுக் கல்லாற்றூர் கண்டன் பிராட்டி குடுத்த பொன் செம்மை பதினைந்து கழஞ்சு இப்பொன் கொண்டு இதன் பலிசையா

3 ல் நாலுழக்கு பிழையா நாழிக்கீழ் முழையால் நிசதி [யு]ழக்கு நெய் தளி அர்ச்சிப்பாற்கு கு[டு]த் . . . . . குடுப்போமானோம் நல்லாற்றூர் நாட்டு தேவதானம் ஆதி ஸபையோம். இது பழங்கற்படி இந்த ஸ்ரீவிமா

4 னத்திலே ஏற வெட்டினமையில் முன்னிவ்வாஜகம் வெட்டிக்கிடந்த தனிக்கல்லால் உபையோகம் இல்லா[மையில் அ]து தவிந்தது. இ[விள]க்கு நொந்தில் பத்மாஹாயேஸ்வர[ர்] கடைக் கூட்டப் பெற்றார்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 38 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 944 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 15 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |
| மன்னன் : | முதலாம் பராந்தக சோழன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி வடக்கு அதிட்டானம்.

குறிப்புரை: திருக்கோடிக்காவில் மகாதேவர்க்கு அர்த்தயாமப்போது திருவமிர்துக்காகக் குறும்பூருடையான் சடையன் தேவடி பெருமான் என்பான் அரைக்காற் செய் நிலம் வழங்கியமை குறிக்கப்படுகிறது. நித்தமும் நாநாழி அரிசியால் திருவமுது செய்தல் வேண்டும். மேலும் இதே அர்த்தயாம வழிபாட்டுக்காக, அவனே முக்கழஞ்சுப் பொன்னும் கொடுத்துள்ளான். அதன் வட்டியிலிருந்து நித்தம் ஒருபிடி நெய்யமுதும் பொரிக்காய் ஒன்றும், தயிரமுது உரியும் வழங்குதல் வேண்டும். திருக்கோயிலுடையார்களே இந்நிவந்தங்களை நிறைவேற்றுதல் வேண்டும் என்று இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இது பழைய கல்வெட்டு ஒன்றின் புதிய படி.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** இது*[வும்]*

2 மொரு பழங்கல்படி மதிரை கொண்ட கோ[ப்]பரகேசரி பந்மக்கு யாண்டு ௩௰௮ ஆவ்து வடகரை நல்லாற்றூர் ந[ாட்டு] திருக்கோடிகாவில் மஹாதேவர்க்கு இன்னாட்டு க . . . . ட்டு [கொற்றக்] . . குறும்பூர் உடையான் சடையன் தேவடி பெருமான் அத்தயாமத் தி[ரு]வமி

3 துக்கு வைத்த நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை கொற்றக் குறும்பூர் வாய்க்கா(ல்)லுக்கு மேற்க்கும் தென்பாற்கெல்லை புது . . . . . லூர்க்கு வடக்கும் மேல்பாற்கெல்லை [தே]வற் செய்க்கு கிழக்கும் வடபாற்கெல்லை கொற்றக் குறும்பூர் வாய்க்காலு

4 க்குத் தெற்க்கும் இ(வ்)விசைத்த பெருநான்கெல்லை[யி]லும் மகப்பட்ட நிலம் அரைக்காற் செய்யும் நிசதி நாநாழி யரிசியால் ஒரு திருவமிது சந்த்ர[ா]*தித்தவற் அமுது செய்யக் குடுத்து

5 இத்திருவமுதுக்கேய் சடையன் தேவடி [பெரு]மாநிடை முக்கழஞ்சு பொன் கொண்டு இதன் பலிசையா[ல்] சந்த்ராதித்தவற் நிசதி ஒருபிடி நெய்யமுதும் பொரிகா[ய்] ஒன்றும்

6 தயிரமுது உரியு(ம்)மட்டுவோமானோம் திருக்கோயிலுடையோம் இது பழங்கற்படி இ(ந்)ந்த ஸ்ரீவிமானத்திலே ஏறவெட்டினமையில் முன்னிவ்வாஜகம் வெட்டிக் கிடந்த

7 தனிக்கல்லால் உபையோகம் இல்லாமையில் அது தவிர்ந்தது. இது பன்மாயேஸ்வரர் ரக்ஷை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 11 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 16 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIII எண் : 218 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |
| மன்னன் : | கோவிராசகேசரி | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி வடபுற அதிட்டானம்.

குறிப்புரை : வடகரை நல்லாற்றூர் நாட்டு ஆரூர் உடையான் அருளாக்கி சேந்தன் என்பவர் ஆண், பெண் அடியார்கள் உணவிற்காக நிலம் வழங்கியமை குறிக்கப்படுகிறது. இது பழைய கல்வெட்டு ஒன்றின் புதிய படி.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** இதுவுமொரு பழங்கல்படி கோவிராஜகேசரி பந்மக்கு யாண்டு ௰௧ ஆவது வடகரை நல்லாற்றூர் நாட்டு ஆ

2 ரூர் உடையான் அருளாக்கி சேந்தனேன் இந்[நா]ட்டு கண்ணமங் கலத்து புதுவாய்க்காலின் வடகரை மூன்று மாவும் வடகரை

3 அரைமாவும் இம்மும்மாவரைச் செய்யும் இரண்டு [கூறு] பெண் ணடியார்க[ள்]மாருண்பதாக ஒரு கூறு ஆணடியாருண்பதாக

4 ச் சந்திராதித்தவல் எப்பேறப்பட்ட இறை[யு]ம் [கா]த்துக் குடுப்போமாய் இறையிலி முதல் கொண்டோம் கண்ணமங்கல

5 த்து ஸபையோம் இதற்றிறம்பில் நாலேகால் முதலாக இயற்றண்டம் ஒட்டிநோம் ஸபையோ

6 **ம்** திருக்கோடிக்காவாந கண்ணமங்கலத்து ஸபையோம் இது பழய கல்படி இந்த ஸ்ரீவிமாநத்திலே ஏற வெ

7 ட்டினமையில் முன்னிவாஜகம் வெட்டிக் கிட[ந்த] தனிகல்லால் உபையோகம் இல்லாமையில் அது தவிர்ந்தது இது

8 முட்டில் பன்மாயேஸ்வர கடைகூட்ட பெற்றார்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 5 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 17 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIII எண்: 125 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |
| மன்னன் : | இராசகேசரி | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி வடபுற அதிட்டானம்.

குறிப்புரை : திருக்கோடிக்காவான கண்ணமங்கலத்தைச் சேர்ந்த அத்திரையன் கிழவன் கோடிக்காவன் திருமெழுக்குப் புறமாகக் காணி அரைக் காணிச் செய் நிலம் அளித்ததையும், அதனைக் கண்ணமங்கலத்துச் சபையார் இறைகாத்துக் கொடுத்தமையையும் இக்கல்வெட்டுச் சுட்டுகிறது. இது பழைய கல்வெட்டு ஒன்றின் புதிய படி.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ இதுவும்மொரு பழங்கல்படி கோவிராஜகேசரி பந்மக்கு யாண்டு

2 ரு ஆவது வடகரை நல்லாற்றூர் நாட்டு திருக்கோடிக்காவிற் மஹாதேவற்க்கு இத்தி[ருக்கோடிக்க]ாவாகிய கண்ணமங்கலத்து அத்திரை

3 யன் கிழவன் கோடிகாவன் மெழுக்குபுறம் வைத்த நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை உட்ச்சிறு[வா]ய்க்காலுக்கு மேற்க்கும் தென்பாற் கெல்லை பு

4 து வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை மெழுக்குப் புறத்துக்கு கிழ

5 க்கும் வடபாற்கெல்லை மெழுக்குப் புறத்து வடவெல்லைக் கொத்ததுக்கு தெற்

6 க்கும் இவ்விசைத்த பெருநான்கெல்லையிலும் அகப்பட்ட நிலம் காணி

7 அரைக்காணிச் செய்யும் விற்றுக்குடுத்து எப்பேற்பட்ட இறையுங் காத்து

8 க்குடுப்போமானோம் கண்ணமங்கலத்து ஸபையோம் இது பழங்கற்படி இ

9 ந்த ஸ்ரீவிமாநத்திலே முன்னிவ்வாஜகம் வெட்டிக்கிடந்த தனிக் கல்லால் உபையோக

10 ம் இல்லாமையில் அது தவிந்தது பன்மாயேஸ்வ[ர ரக்ஷை]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 13 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 998 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 19 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |
| மன்னன் : | முதலாம் இராசராசன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி வடபுறச் சுவர்.

குறிப்புரை : திருக்கோடிக்காவுடையாருக்குக் கொடுக்கப்பட்ட தேவதான நிலங்களுக்கு அளவும், எல்லைகளும் குறித்து, அவற்றிற்கு நீர் பாய வகை செய்ததையும் இக்கல்வெட்டு குறிக்கிறது. செம்பியன் மாதேவியாரின் திருமுகம் வரக்கண்டு ஊர் சபையாரும், மாஹேஸ்வரர்களும் திருக்கோயிலுடைய பணியாட்கள் (மாண்) மூவருக்கு நிலம் அளந்து பயிர்செய்ய அளித்ததைத் தெரிவிக்கிறது. இது பழைய கல்வெட்டு ஒன்றின் புதிய படி.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலை
2 கலமறுத்த கோ
3 விராஜராஜ்கேஸரி
4 பந்மக்கு யாண்டு
5 ௰௩ ஆவது உடை
6 ய பிராட்டியார் செ
7 ம்பியன் மாஹாதே
8 வியார் திருமுகம் வர
9 க்காட்டி அருள இவ்வூ
10 ர் ஸபையாரும் மா
11 ஹேஸ்வரருமிருந்து
12 இத்தேவர் திருக்கோ
13 யிலுடையா[ர்]*களுக்
14 கு இத்தேவர் தே
15 வதாநத்து நிலத்
16 துக்கு கீழ்பாற்[லெ]*க(ல்)
17 ல்லை இத்தேவர் நி
18 லத்துக்கு மேக்கு

19 ம் தென்பாற்க்கெல்

20 லை குறுக்கை வா

21 க்காலுக்கு வடக்கு

22 ம் மேல்பாற்கெல்

23 லை புதுவாய்[க்]*கால்

24 நின்று போந்த [உ]

25 ட்சிறு வாய்காலுக்

26 கு கிழக்கும் வடப[ா]

27 [ற்]கெல்லை புதுவா

28 ய்[காலுக்குத்] தெற்

29 குமிந்நடுவுப

30 ட்ட நிலத்தில் மேக்க

31 டைய ஒரு மா[ணு]க்கு

32 காற் செய்யாக இவ்

33 வூர் கோலாலளந்து

34 நாலு குழி கொண்டது

35 ஒருமாவாக முக்காற் செ

36 ய்யுமளவுபடி கொண்

37 டு குறுக்கை வாக்காந் க

38 [ண்]குலை இருகோலும்

39 புது வாக்கான் கண் ஒ

40 ன்றேகால் கோலும் நீ

41 க்கின நிலம் மூன்றே

42 கால் கோலால் வ

43 ந்த நிலமும் நா

44 ங்களே பெறுவதா

45 கவும் குலைநீக்கி

46 முக்காற் செய்

47 குலையும் கொ

48 [ண்டு] சந்திராதித

49 வல் மாண் மூன்று

50 . . வயக்க வா

51 [ரா]நோம் திருக்கோ

52 விலுடையோம் பு

53 து வாய்கால் நின்[று]

54 ம் தெற்கு நோக்கி தே

55 தவர் நிலத்தாறே

56 போந்து எங்கள்

57 தென்குலைய்க்கே

58 போதேன் கரை காற்

59 செய்க்கு பாயப் பெறு

60 வதாகவும் மாண் முட்

61 டில் மாணால் குறுணி

62 நெல்லு தண்டப்ப

63 படுவோம் திருக்கோயி

64 லுடையவரும் இை

65 வ பன்மாயே[ஸ்வர ரக்ஷை]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 16 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1001 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 18 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |
| மன்னன் : | முதலாம் இராசராசன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி வடசுவர்.

குறிப்புரை : திருக்கோடிக்காவல், வடகரை [காவிரியின்] நல்லாற்றூர் நாட்டைச் சேர்ந்த பிரம்மதேய ஊராகும். இவ்வூர் திருக்கோடிக்காவாகிய .கண்ணமங்கலம் என்று வழங்கப்பட்டு வந்தது. இவ்வூர்ச் சபையார், கோயிலிலிருந்து ஐம்பது காசுகளைப் பெற்றுக்கொண்டு இறையிலியாக நிலம் விற்றுக் கொடுத்தனர். அந்த நிலத்தின் அளவு ஒன்பது மாகாணி அரைக்காணியாகும். இந்நிலத்திற்கு எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

*கல்வெட்டு :*

1 **ஸ்வஸ்திஸ்ரீ** திருமக
2 ள் போலப் பெ
3 ருநிலச் செல்வி
4 யுந் தனக்கே யு
5 ரிமை பூண்டமை
6 மனக்கொளக் காந்தளூ
7 ர்ச்சாலை கலமறுத்தருளி வே
8 ங்கை நாடுங் கங்க பாடியு
9 ந் தடிகை பாடியும் நு

10 எம்பபாடியும் குடமலை நாடுங்
11 கொ[ல்]*லமுங் கலிங்கமும்(ந்)
திண்டிறல் வெ
12 ன்றித் தண்டாற்க் கொண்டு
தன்னெழில் வள
13 ருளியு [ளெல்லா] யாண்டு(ம்)
14 ந் தொழுதகை
15 விளங்கும் யாண்
16 டேய் செழியரை
17 த்தேசுகொள்
18 ஸ்ரீ கோவிராஜ
19 ராஜராஜ கே
20 ஸரி பந்மக்கு யா
21 ண்டு மசு ஆ
22 வது வடகரை
23 நல்லாற்றூர் நாட்
24 டு ப்ரஹ்மதேயந்
25 திருக்கோடிகா
26 வாகிய கண்[ண]
27 மங்கலத்து ஸ
28 பையோம் தி
29 ருக்கோடிகா
30 வில் மஹா
31 தேவரி[டை]
32 நாங்கள்
33 கொண்டு க
34 டவ காசு ரு
35 ம இக்காசு
36 ஐம்பதுக்
37 கும் இறையி
38 லியாக விற்
39 றுக் குடுத்த
40 நிலமாவ
41 து இவ்வூ
42 ர் வடவூர
43 ார் ப(ா)சலி
44 யென்று பே
45 ர் கூவப்பட்
46 ட நிலம்
47 ஒ[ன்பது] இ
48 ந்நிலம் ஒ
49 ன்பது மா(ா)
50 காணி யரை
51 க் காணிக்கும்
52 கீழ்பாற்க்கெ
53 ல்லை செல்
54 லூருடைய[ா]
55 ன் சடைய
56 ன் [கெ]செருமா
57 ளகியாந் நிலத்து

58 க்கு மேற்க்கும் தென்
59 பாற்க்கெல்லை [ஒ]ழுக்கு
60 ப்புறத்துக்கு வடக்கும்
61 மேல்பாற்க்கெல்லை
62 கணத்தார் வாய்க்கா
63 லுக்கும் செல்லூருடை
64 யான் சடையன் [கெ]
65 செருமான் நிலத்துக்
66 கும் கிழக்கும் வடபா
67 ற்க்கெல்லை கிழக்கு
68 நோக்கிப் போன வாய்
69 க்காலுக்குத் தெற்க்கு
70 மாக இவ்விசைத்த
71 பெருநான்கெல்லை
72 யிலுமகப்பட்ட நில
73 ம் ஒன்பது மாக்காணி
74 யரைக்காணி . . . உண்
75 ணிலமொழிவின்றி
76 மிகுதிக் குறைமை
77 உள்ள[டங்க] சந்திராதி
78 த்தவல் இறைகாத்
79 துக் குடுத்தோ
80 ம் திருக்கோ
81 டிகாவான
82 க[ண்]*ண மங்கல
83 த்து ஸபை
84 யோம்
85 இது **பந்மா**
86 யேஸ்வரர்கள்
87 ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 20 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIX எண் : 115 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி மேற்குப்புறச் சுவர்.

குறிப்புரை : திருக்கோடிக்கா மகாதேவர்க்கு நொந்தாவிளக்கெரிப்பதற்காக மணிமங்கலமுடையான்சேரி பரமயோகி, திருக்கோயிலுடையாரிடம் 13 கழஞ்சுப் பொன் கொடுத்துள்ளார். இப்பொன்னைப் பெற்றுக்கொண்டு அதன் வட்டி கொண்டு திருக்கோயிலுடையார் ஒரு நொந்தா விளக்கெரித்து வந்துள்ளனர். இது பழைய கல்வெட்டு ஒன்றின் புதிய படி. அதாவது பழைய தனிக் கல்லில் பொறிக்கப்பட்டிருந்த இந்தக் கல்வெட்டு வாசகம் பின்னர் கற்கோயிலாகக் கட்டியபோது கோயில் திருச்சுற்றில் பொறிக்கப்பட்டது.

**கல்வெட்டு :**

1 **ஸ்வஸ்தி**
2 ஸ்ரீ இதுவு
3 ம்மொரு ப
4 முங்கற்படி கோ
5 ப்பரகேசரி பந்மற்க்கு
6 யாண்டு ௪ ஆவது திரு
7 க் கோடிக[ா*]வில் மஹ[ா*]தே
8 வற்க்கு மணிமங்க[ல]*
9 முடையான் சேரி பரம
10 யோகி ஒரு நொந்தாவி
11 ளக்கினுக்கு குடுத்த
12 பொன் ௰௩ இப்பொன்
13 கொண்டு இதன் பலிசை
14 யால் சந்த்ர[ா*]தித்தவல்
15 ஒரு நொந்தா விளக்கெ
16 ரிப்போமானோம் இத்திருக்
17 கோயிலுடையோம் இ
18 து பழங்[கற்படி] இ(ந்)
19 ந்த ஸ்ரீவிமானத்திலே ஏ
20 றவெட்டினமை[யில்]*முன்னி
21 வாஜகம் வெட்டிக் கிடந்த த
22 தனிக்கல்லா[ல்]* உபையோக
23 ம் இல்லாமையில் அது
24 தவிர்ந்தது பன்மாயே
25 **ஸ்வர ரக்ஷை**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 5 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 26 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIV பிற்சேர்க்கை எண் : 1 |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 12 |
| மன்னன் : | கோமாறஞ்சடையன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி மேற்குப்புறச் சுவர்.

குறிப்புரை : திருக்கோடிக்கா மகாதேவர் கோயிலில் இறைவனுக்குத் திருவமுது படைத்து வழிபாடு செய்வதற்காகப் பேராவூர் நாட்டுக் காவனூருடையான் பன்னிரண்டு கழஞ்சுச் செம்பொன் வழங்கியிருக்கிறான். இப்பொன்னிற்கு வட்டி (பலிசை) விகிதம் கலனேய் முக்குறுணி நெல்லாகும். இதன்படி ஆண்டு ஒன்றுக்குப் பதினைந்து கலநெல் வட்டியாகிறது. இந்த வட்டி நெல்லின் மூலமாக இவ்வூர் மகாதேவருக்குத் திருவமுது படைத்து வழிபாடு செய்வதற்காக, நாள் ஒன்றுக்கு நானாழி நெல் வீதம் இக்கோயிலில் அர்ச்சனை செய்து வருபவனிடம் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு தானமாகக் கொடுக்கப்பட்ட மூலதனமாகிய பன்னிரண்டு கழஞ்சுச் செம்பொன்னைப் பெற்றுக்கொண்டு மேற்கூறிய விகிதத்தில் வட்டியளிக்க சம்மதித்தவர்கள் கஞ்சனூர் உள்ளிட்ட மகேந்திரக் கோட்டூர்ச் சபையோர் ஆவர். இவர்கள் சம்மதித்தபின், கோயில் நிர்வாகிகளாகிய பன்மாயேசுவரர்கள், மேற்கூறிய வட்டி நெல்லினைக் கொண்டு, நாள் ஒன்றுக்கு நான்கு நாழி நெல் வீதம் திருவமுதுக்குப் பயன்படுத்துவதாக உறுதியளித்தனர். அதன் பின்னர் கஞ்சனூர் உள்ளிட்ட மகேந்திரக்கோட்டூர்ச் சபையார் தாங்கள் பன்னிரு கழஞ்சுப் பொன்னை மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு இணங்கப் பெற்றுக்கொண்டதனையும் எழுதிக் கொடுத்தனர்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஶ்ரீ கோமா
2 றன் சடையர்க்கு யா
3 ண்டு ரு ஆவது திருக்

4 கோடிகாவில் மஹாதேவர்க்கு
5 ப்பேராவூர் நாட்டு காவனூருடை
6 யான் பரமிருக்கன்[வச்ச] தீப்பொக்கு
7 ச் செம்பொன் [பன்]னிரு கழஞ்
8 சு இப்பொன்னின் பலிசையா
9 [ல்] . . கலனேய் முக்குறுணி
10 நெல்லாக ஆண்டு பதினைஞ்கல
11 நெல்லு எண்ணாழிக் காலால் திருக்
12 கோடிகாவில் மஹாதேவர் கோயி
13 லுக்கேய் கொ[ண்]*டு வந்து தளியர்சி
14 ப்பான் கைய்யிலளந்து குடுப்பே
15 பாமானோங் கஞ்சனூருள்ளிட்ட ம
16 ஹேந்தர கே[ரட்டூர் ஸபையோம் இந்]
17 நெல்லுப் பன்[மாயே]ஸ்வரர் கடை
18 கூட்டப் பெற்றார் நி[சதி]நானாழி நெ
19 ல்லால் நிசதித்[திரு]வமுது காட்டுவி
20 ப்போமாக இப்பரிசு ஒ[ட்டி] இப்பொ
21 ன் பன்னிரு கழஞ்சுங் கொண்டே[ா
22 ங்] கஞ்சனூ(ர்)ருள்ளிட்ட மஹேந்த்ர கோ
23 ட்டூர் ஸபையோம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 21 / 1930-31 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIV எண் : 20 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |
| மன்னன் : | கோமாறஞ்சடையன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி மேற்குப்புற அதிட்டானம்.

குறிப்புரை : திருக்கோடிக்கா மகாதேவர் கோயிலில் நொந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்காகப் பேரையூர்நாட்டுப் பனையூரைச் சேர்ந்த அரையன் கள்வன் என்பவன் பதினைந்து கழஞ்சுப் பொன்னைக் கொடையாக அளித்துள்ளான். இப்பொன்னைத் திருக்கோடிக்காவுக்கு அருகிலுள்ள நாரணக்கச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார்கள் பெற்றுக்கொண்டு, அதற்கு வட்டியாக[பலிசை]ப் பிழையாநாழி என்ற நாழியின் அளவுப்படி உழக்கு நெய்யினை, இக்கோயிலில் அர்ச்சனை வழிபாடு செய்து வருபவர்களிடம் தாங்களே தவறாமல் கொடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஶ்ரீ** இதுவும்மொரு பழங்கல்படி கோமாறன்சடையற்க்கு யாண்டு நான்காவது [பே]ரையூர் நாட்டு பனையூர் அரையன் கள்வன் திருக்கோடிகாவல் மஹாதேவற்க்கு நொந்தா விளக்கிநுக்கு குடுத்த செம்பொன் பதினைங்கழஞ்சு இ

2 தன் பலிசையால் நா(ல்)லு உழக்கும் பிழையா[நா]ழிக்கீழ் உழக்கின் [வாய்] நிசதி உழக்கு நெய்யு மித்தளிக்கே குணன்து அச்சிப்பார்க் களந்து குடுப்போம[ா]ய் இப்பொன் கொண்டோம் நாரண[க்க] சதுவ்வேதி மங்கலத்து ஸபையோம்

3 இது பழயகல்படி இந்தஶ்ரீவிமாநத்திலே ஏறவெட்டிநமையில் முன்னிவாஜகம் வெட்டிக் கிடந்த தனிகல்லால் உபையோகம் இல்லாமையால் அது தவி(ன்)ந்தது இது முட்டில் பன்மாயேஸ்வ[ரர்] கடைக் கூட்டபெற்றார்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 24 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 889 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 22 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XII எண் : 78 |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 14 |
| மன்னன் : | நிருபதுங்கவர்மன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி மேற்குப்புற அதிட்டானம்.

குறிப்புரை : திருக்கோடிக்கா மகாதேவர் கோயிலுக்கு நொந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்குக் கொண்டநாடுடைய வேட்டுவதி அரையனான மல்லன் வேங்கடவன் என்பவன் பதினைந்து கழஞ்சுப் பொன் கொடுத்திருக்கிறான். இப்பொன்னை நாரணக்கச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் பெற்றுக்கொண்டு, அப்பொன்னிற்கு வட்டியாக நாள்தோறும் உழக்கு நெய் வீதம் இக்கோயிலில் அர்ச்சனை வழிபாடு செய்துவருபவனிடம் கொடுத்துவந்தனர். மேற்கூறிய ஒப்பந்தத்தின்படி நொந்தா விளக்கு எரியச் செய்வதற்கும், தவறுகின்றபோது அதைச் சீர்படுத்துவதற்கும் உரியவர்கள் கோயில் அதிகாரிகளாகிய பன்மாயேஸ்வரர்கள் என்பதும் இவ்வூர்க் கல்வெட்டுக்களால் தெளிவாகப் புலனாகிறது.

நிருபதுங்கவர்மன் காலத்தில் செதுக்கப்பட்ட இக்கல்வெட்டு, புதிதாகக் கட்டப்பட்ட கோயிற் சுவரில் வெட்டப்பட்ட பின்னர், பழைய கல் பயன்படாத காரணத்தினால் தவிர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது,

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்திஸ்ரீ இதுவும்மொரு பழங்கல்படி கோவிசய

2 ந்ருபதொங்க விக்ரமபந்மற்கு யாண்டு இருபத்து நாலாவது திருக்கோடிகாவில் மஹாதேவர்க்கு நொந்தா விளக்கினுக்கு கொண்டநாடுடைய வேட்டுவதி அரையனான மல்லன் வேங்கடவன் குடுத்த பொன் பதினைங்கழஞ்சு இப்பொந் கொண்டு இதன் பலிசையால் நாலு

3 ழக்கும் பிழையா நாழிக்கீழ் முழையால் நிசதி உழக்கு நெய் தளிஅர்ச்சிப்பார்க்கே(ளந்து) அளந்து குடுப்போம்மானோம் மாசந்திர காலமுமளந்து குடுப்போமானோம் நாரணக்கச்சதுவ்வேதி மங்கலத்து ஸபையோம் இது பழய கல்படி இ

4 ந்த ஸ்ரீவிமாநத்திலே ஏறவெட்டிநமையில் முன்னிவாஜ[க]ம் வெட்டிக் கிடந்த தனிக்கல்லால் உபையோகம் இல்லாமையால் அது தவ(ன்)ந்தது இது முட்டில் பன்மாயேஸ்வரர் கடைகூட்டப் பெற்றார்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 23 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | தெ. க. தொ. XIII எண் : 102 |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 15 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இராசகேசரி | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி அதிட்டானத்தின் மேற்குப்புறக் குமுதம்.

குறிப்புரை : திருக்கோடிக்காவல் இறைவனுக்கு இறையிலியாக (காவிரியின்) வடகரை நல்லாற்றூர் நாட்டு பிரமதேசம் நாரணக்கச் சதுர்வேதிமங்கலத்துச் சபையோர்கள், நிலம் விலைக்கு வாங்கிக் கொடுத்தனர். இந்த நிலத்தின் அளவு முக்கால் செய் ஆகும். இந்த நிலத்தின் எல்லைகளும் கூறப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டும் பழைய கல்வெட்டின் புதிய படி. முன்னர் கூறியதுபோலவே, பழைய கல்வெட்டுப் பொறித்த தனிக்கல் பயன்படாத காரணத்தினால் அது தவிர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

*கல்வெட்டு :*

1 **ஸ்வஸ்திஸ்ரீ** இது[வு]ம்மொரு பழங்க

2 ல்படி கோவிராஜகேசரி ப**ந்ம**க்கு யாண்டு நான்காவது வடகரை நல்லாற்றூர் நாட்டு **ப்ரஹ்மதேய**ம் நாரணக்க சது**ர்வே**திமங் கலத்து ஸபையோம் விற்ற நிலவிலையாவணம் இ[ந்]நாட்டு திருக்கோடிகாவில்ப் பெருமாள்ளுக்கு நாங்கள் சந்த்ராதித்தவல் இ

3 றைகாத்துக் குடுக்கும் இத்தேவ(ர்) ரிறையிலி யூண்ண* விலைகொண்டு குடுத்த நிலமாவது இன்நாரணக்க சதுர்வேதிமங்கலத்தாரின் மீயூர்கி(ழ்)ழைமடை கன்டத்து ஸபையோம் கொட்டிப்புறத்து அன்னந்தி க்ரமவித்தனும் காரம்பிசெட்டு மூத்த தாமோ

4 திர க்ரமவித்தனும் இவன் தம்பி நாராயண க்ரமவித்தனும் பக்கல் ஸபையோம் விலைகொண்டு உடைய முக்கால் செய்க்கும் கீழ்பாற்கெல்லை ஸூ[ர்ய ராமந்] நீலகண்டபட்டனும் கா[ரம்]பிச் செட்டு அக்குமாரக் க்ரமவித்தனும் முடை[ட]ய நிலத்துக்கும் நாட்டர்

5 வாய்காலின் நின்றும் வடக்கு னோக்கி போந்த உள்சிறு வாய்க் காலு[க்]கும் மேற்கும் தென்பாற்க்கெல்லை கொட்டிப்புறத்து அன்னந்தி க்ரமவிதந்த** நில[த்]துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை நாட்டர் வாய்[க்]கால் நின்றும் வடக்கு நோக்கி போந்த வதி வாய்க்காலுக்குக் கிழக்கும் வடபா

6 ற்கெல்லை திடற்சேரி நத்த[த்]து ஸபையோம் குடிமக்க(ள்)ளுக்கு விற்ற நிலத்துக்குத் தெற்கும் இவிசைத்த பெருநான்கெல்லை யிலும் அகப்பட்ட நிலம் மேடும் பள்ளமும் உள்ப்பட முக்கால் செ[ய்]யும் விற்று விலையாவணம் செ[ய்]து குடுத்தோம் திருக்கோ[டிகா]

7 வில் தேவற்க்கு இறையும் எச்சோ(ற்)றும் எப்பேறபட்ட வெட்டியூ*ம் புறவுரி(ய்)யூ*ம்‡ சந்த்ராதித்தவல் காத்துக் குடுப்போ மானோம் நாரணக்கச் சதுர்வேதிமங்கலத்து ஸபையோம் இது [பழ]ய கல்படி இந்த ஸ்ரீவிமாநத்திலே ஏ(ற்)றவெட்டினமையில் மூ*ன்

8 னிவாஜ[க]ம் வெட்டிக்கிடந்த தனிகல்லால் உபையோகம் இல்லாமையா[ல்] அது தவிர்ந்தது இது மூ*ட்டில் பன்மாயேஸ்வ[ர]ர் கள[டக்கூட்ட பெற்றார்]

---

* 'யுண்ண', 'வெட்டியும்', 'வரிய்யும்' 'முன்னிவாஜகம்', 'முட்டில்' எனப் படிக்கவும். உகரம், ஊகாரம் போலவே எழுதப்பட்டுள்ளது.

** 'வித்தந்' எனப் படிக்கவும்.

‡ 'புறவுவரியும்' என்று படிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 9 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 915 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 24 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 16 |
| மன்னன் : | முதலாம் பராந்தக சோழன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி மேற்குப் புற அதிட்டானச் செகதி.

குறிப்புரை : திருக்கோடிக்காவல் மகாதேவர் கோயிலுக்கு இரவும் பகலும் விளக்கெரிப்பதற்குத் திருநறையூர் நாட்டுத் தண்டத்தோட்டமுடையான் கலியன் காடன் என்பவன், தொண்ணூறு ஆடுகள் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

இந்தக் கல்வெட்டும் புதிதாகக் கட்டப்பட்ட சுவரில் எழுதப்பட்டது. பழைய கல் பயன்படாத காரணத்தினால் தவிர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 [ஸ்வஸ்திஸ்ரீ இதுவுமொரு பழங்]கல்படி மதிரை கொண்ட கோப்பரகேசரி [பன்மர்க்கு யாண்டு கூ] ஆவது வடகரை நல்லாற்றூர் நாட்டு திருக்கோடிகாவில் மஹாதேவற்க்கு

2 திருநறையூர் நாட்டுத் தண்டத்தே[ா]ட்டமுடையான் கலியன் காடன் சந்த்ராதித்தவல் நிசதி [உரிய்] நெய்யால் இரவம்* பகலும் எரிப்பதற்க்கு [சாவாமூவா]ப் பேராடு தொண்ணூறு இதுவும் மொ[ரு பழங்கல்படி] இந்த ஸ்ரீவிமானத்திலே ஏறவெட்டினமை [யில் முன்னிவாஜகம் வெட்டிக்கிட]ந்தத் தனிக்கல்லால் உபை யோகம் இல்லாமையில் அது தவிந்[த]

3 து இது பன்மா(ய்)யேஸ்வர ரக்ஷை

* 'இரவும்' என்று படிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 21 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 927 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 25 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 17 |
| மன்னன் : | முதலாம் பராந்தக சோழன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழி மேற்கு அதிட்டானச் செகதி.

குறிப்புரை : திருக்கோடிக்காவில் மகாதேவர்க்கு இரவிலும் பகலிலும் தொடர்ந்து விளக்கு ஒன்று எரிப்பதற்காக அளிக்கப்பட்ட கொடையை இக்கல்வெட்டுக் குறிக்கிறது. இவ்விளக்கு எரிப்பதற்காகப் படையேவிய கடவூரைச் சேர்ந்த பாரதாயன் நக்கன் என்பவன் தொண்ணூறு ஆடுகளைத் தானமாக அளித்துள்ளான். இவ்வாடுகளின் மூலம், நாள்தோறும் உழக்கு நெய்யினை இவ்விளக்கு எரிப்பதற்காக அளித்தல் வேண்டும்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ இதுவுமொரு பழ[ங்]கற்படி மதிரை கொண்ட கோப்பர கேசரி பந்மக்கு யாண்டு உ௰௧ ஆவது வடகரை நல்லாற்றூர் நாட்டுத் திருக்கோடிகாவில் மஹாதேவர்க்கு . . . [படை]யேவிய கடவூர் பாரதாயன் நக்கன் . . . சந்திராதித்தவல் நிசதி உழக்கு நெய்யால் இரவும் பகலும் எரிப்பதற்கு [இ]வைய் சாவா மூவ

2 ா பேராடு தொண்ணூறு இது பழங்கற்படி இந்த ஸ்ரீவிமாநத்திலே ஏற வெட்டினமையி[ல்]* முன்னிவாஜகம் வெட்டிக் கிடந்த தனிக்கல்லால் உபையோகம் இல்லாமையால் அது தவிந்தது பந்மாயேஸ்வர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 11 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 28 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 18 |
| மன்னன் : | — | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழியின் தென்புறப் பட்டிகை.

குறிப்புரை : திருக்கோடிக்கா மகாதேவர் கோயிலுக்கு நொந்தா விளக்கெரிப்பதற்காகத் தானமாக அளிக்கப்பட்ட அறுபது கழஞ்சு[ப் பொன்னை]க் கண்ணமங்கலத்துச் சபையார் பெற்றுக்கொண்டு, இப்பொன்னின் வட்டியால் தினமும் உரி நெய்யினைக் கோயிலில் பூசை செய்வாரிடம் அளந்து கொடுத்து விளக்கெரித்துள்ளனர். இதுவும் பழைய கல்வெட்டின் படியாகும். மன்னர் பெயர், ஆட்சியாண்டு பொறிக்கப்பட்ட பகுதி பின்னர் எழுப்பிய கட்டடத்திற்குள் மறைந்துவிட்டது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ இதுவும்மொரு பழங்கல்படி யாண்டு பதின்னொன்றாவது திருக்கோடிக்காவிற் மஹா [. . . . . . . . . . . . . . . .]* நிறை அறுபதின் கழஞ்சு இதந் பலிசையால் நாள்வாய் உரிய் நெய் தளியற்சிப்பாற்களந்து குடுத்து நொந்தா விளக்கெரிப்போமா

2 னோம் கண்ணமங்கலத்து ஸபையோம் இது பழயகல் படி இந்த [. . . . . . . . . . . . . . . .]* மில்லாமையில் அது தவிந்தது இது முட்டிற் பன்மாயேஸ்வரர் கடை கூட்டப் பெற்றார்

* கல்வெட்டுப் பகுதிகள் கட்டடத்தினுள் மறைந்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 11 + . . . |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 29 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIV பிற்சேர்க்கை எண் : 2 |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 19 |
| மன்னன் : | மாறஞ்சடையன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழியின் தென்புறப் பட்டிகை.

குறிப்புரை : திருக்கோடிக்காவில் மகாதேவர்க்குத் திருவிளக்கு எரிப்பதற்காகத் தீப்போக்குச் செம்பொன் முப்பது கழஞ்சு கொடுக்கப்பட்டது. இந்த முப்பது கழஞ்சு பொன்னின் வட்டியிலிருந்து நாள்தோறும் அரை உழக்கு நெய் விளக்கெரிப்பதற்கு, இக்கோயில் அர்ச்சனை செய்பவர்களிடம் கொடுக்கப்பட்டது. இந்தக் கொடையைக் கொடுத்தவன் பெயர் கூறப்பட்டுள்ள பகுதி கட்டடத்திற்குள் சென்றுவிட்டது. இப்பொன் முப்பது கழஞ்சையும் பெற்றுக்கொண்டு வட்டியாக நெல் கொடுத்தது கண்ணமங்கலத்து சபையோர் அல்லது நாரணக்கச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோராக இருத்தல் வேண்டும்.

இக்கொடையின் மூலம் எரிக்கப்பட வேண்டிய விளக்கு, ஏதாவது ஒரு காரணத்தினால் தவறுகின்றபோது பன்மாயேசுவரர்களாகிய கோயில் நிர்வாகத்தினர் அதனைச் சரிசெய்து விளக்கெரிய ஏற்பாடுகள் செய்தல் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இப்பழைய கல்வெட்டும் புதிதாக கற்கோயில் கட்டப்பட்டபோது எழுதப் பட்டபின்னர், பழைய கல் உபையோகம் இல்லாத காரணத்தால் தவிர்க்கப்பட்டது.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** இதுவும்மொரு பழங்கல் படி கோமாறஞ்சடையற்கு யாண்டு பதினொான்[றாவ]தின் மேல் [. . . . . . . , . . . . . . . . .]‡ . . . . **மஹா**தேவற்க்கு திருவிளக்கினுக்கு குடுத்த தீப்பொக்குச் செம்பொன் முப்பதின் கழஞ்சு இதன் பலிசையால் நாலுழக்கும் பிழையா நாழியோடொ

2 க்கும் முழையால் நாழிக் கீழ் உழக்கரை நெய் தளி அற்சிப் பார்களந்து நொந்தா விளக் [. . . . . . . . . . . . . . . . . . .]‡ பழய கல்படி இந்த ஸ்ரீவிமாநத்திலே ஏற வெட்டிநமையில் முன்னிவ்வாஜகம் வெட்டிக் கிடந்த தனிக்கல்லால் உபையோகம் இல்லாமை[யா]*ல் அது தவி[ந்]*தது

3 இது முட்டிற் பன்மாயேஸ்வரர் கடைக் கூட்டப் பெற்றார்

---

‡ கட்டடத்தினுள் மறைந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 30 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 20 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழித் தென்புற அதிட்டானம்.

குறிப்புரை : திருக்கோடிக்காவாகிய கண்ணமங்கலத்திலுள்ள ஆலங்கொல்லை என்ற பெயருடைய அரையே இரண்டு மா நிலத்தை, இவ்வூர் மகாதேவர் கோயிலுக்குப் பழையாற்று நந்திபுரத்தைச் சேர்ந்த குமரன் கணவதி என்ற வியாபாரி, மடவிளாகமாக அளித்திருக்கிறான். இந்த நிலத்தை இறையிலி செய்துகொடுப்பதற்காக அவனே ஐங் கழஞ்சரை பொன்னையும் கொடுத்திருக்கிறான். இந்தப் பொன்னைப் பெற்றுக் கொண்ட திருக்கோடிக்காவாகிய கண்ணமங்கலத்துச் சபையோர் இறையிலி (வரி நீக்கம்) செய்து கொடுத்திருக்கின்றனர்.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஶ்ரீ** இதுவும் ‡ . . . . . . . . . . . . . . . . . . . . . . றூர் நாட்டு **ப்ரஹ்மதேயம்** திருக்கோடிகாவான கண்ணமங்கலத்து ஆலங்கொல்லை அரையே இரண்டுமாவும் பழையாற்று நந்திபுரத்து

2 வியாபாரி குமரன் கண . . . . . . பேரால் விலைகொண்ட நிலத்துக்கு ‡ . . . . , . . . . . . . மல்பாற்கெல்லை உடாலியர்கள் நிலத்துக்குக் கிழக்கும் வடபாக்கெல்லை பெருவழிக்கு தெற்க்கும் இவ்விசைத்த பெருநான்கெல்லையிலு மகப்

‡ கட்டடப் பகுதியால் மறைக்கப்பட்டுள்ளது.

3 [ப]ட்ட நிலம் உண்ணில மொழிவின்றி திருக்கோடிகாவில் ஸதாசிவ பிடாரந் . . . . தாந . . . . . . . . ளிட்ட எ . . . . . பணிமக்கள் தன்த த . . . . . . . செக . . . . . க்கும் உகச்சகளுக்கும் குமரன் கணவதி இருக்க தன்மஞ் செய்து குடுத்த மடவிளாகம் அரையே இரண்டு மா நிலத்துக்கும் அ . .

4 . ங்கழுஞ்சரை பொன் கொண்டு சந்த்ராதித்தவல் இறையிலி செய்து குடுத்தோம் [திருக்கோடிகாவான] கண்ணமங்கலத்து **ஸபையோம்** இது பழய கல்படி இந்த ஸ்ரீவிமாநத்திலே ஏற வெட்டினமையில் முன்னிவ்வாஜகம் வெட்டிக் கிடந்த தனிக்கல்லால் **உபையோகம்** இல்லாமையால் அது தவி

5 ந்தது இதுமுட்டி[ல்]* பந்மாயேஸ்வர கடை கூட்ட பெற்றார்

TAMIL

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 15 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 31 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIII எண்: 259 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 21 |
| மன்னன் : | இராசகேசரிபன்மர் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழித் தென்புற அதிட்டானக் குமுதப் படை.

குறிப்புரை : திருக்கோடிக்கா மகாதேவர் கோயிலுக்குத் திருவிளக்கு எரிப்பதற்கும், திருவமுது படைப்பதற்கும், பழையாற்று நந்திபுரத்தைச் சேர்ந்த குமரன் கணவதி என்ற வியாபாரி எழுபது கழஞ்சுப் பொன்னைக் கொடையாக அளித்திருக்கிறான். இவ்வூர்ச் சபையோர் அப்பொன்னைப் பெற்றுக் கொண்டு அதன் வட்டி (பலிசை) கொண்டு, நொந்தாவிளக்கிற்கு ஒவ்வொரு நாளும், உழக்கு நெய்யும், அமுது படைப்பதற்கு இரு நாழி அரிசியும் கொடுக்க இசைந்துள்ளனர்.

*கல்வெட்டு :*

1 **ஸ்வஸ்திஸ்ரீ** இதுவும்மொரு பழங்கல்படி கோவிராஜகேசரி **பந்ம**க்கு யாண்டு பதின் அஞ்சாவது பழையாற்று நந்திபுரத்து வியாபாரி குமரன் கணவதி திருக்கோடிகாவல் **மஹா**தேவற்கு திருவிளக்கினுக்கும் திருவமிதினுக்கும் குடுத்த பொ[ன்] எழுபதின் கழஞ்

2 சு இப்பொன் கொண்டு இப்பொன்னின் பலிசையால் நொந்தாவிளக்குக்கு நிசதம் உழக்கு நெய்யும் திருவமிர்தினுக்கு நிசதம் இருநாழி அரிசியும் **சந்த்ரா**தித்தவல் அட்டுவோமானோம் திருக்கோடிகாவான கண்ணமங்கலத்து **ஸபையோ**ம் இது பழய கல்படி இந்த ஸ்ரீவிமாநத்தி(ல்)லே ஏற வெ

3 ட்டிநமையில் முன்னிவ்வாஜகம் வெட்டிக் கிடந்த த(ன்)னிக்கல்லால் உபையோகம் இலாமையால் அது தவிர்த்து இதுமுட்டில் பன் மாயே**ஸ்**வரர் கடை கூட்ட பெற்றார்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 12 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 32 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIII எண் : 231 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 22 |
| மன்னன் : | இராசகேசரிபன்மர் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழித் தென்புற அதிட்டானம்.

குறிப்புரை : திருக்கோடிக்காவாகிய கண்ணமங்கலத்துச் சபையாரிடம் மாசேனன் மாதன் என்பவன் எட்டு மா நிலத்தை விலைக்கு வாங்கிக் கோயிலுக்குக் கொடை அளித்திருக்கின்றான். அந்நிலத்திற்கு இறையும் எச்சோறும் ஆகிய வரிகள் செலுத்த வேண்டாது காத்துக் குடுப்பதாகக் (இறையிலியாக) கண்ணமங்கலத்துச் சபையோர் ஒப்புதல் அளித்துள்ளனர். மேலும் அவனிடமிருந்து ஒரு கழஞ்சுப் பொன்னைப் பெற்றுக்கொண்ட திருக்கோயிலுடையார்கள், காவிரியிலிருந்து ஒரு பொழுதுக்கு ஐந்து குடம் நீர், இறைவனை நீராட்டுவதற்காகக் கொண்டுவந்து தருவதாக ஒப்புக் கொண்டனர். இந்த பொன்னிலிருந்து கிடைக்கப்பெறும் (பலிசையால்) வட்டிப் பணத்தால் தூணி (நான்கு மரக்கால்) அளவு நீர் கொள்ளும் குடம் ஒன்று வாங்கிக் கொள்வதாகவும் இசைந்திருக்கின்றனர்.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஶ்ரீ** இதுவும்மொரு பழங்கல்படி கோவிராஜ கேசரி **பந்மக்கு** யாண்டு ௰உ ஆவது திருக்கோடிகாவில் **மஹா**தேவர்க்கு மேற்கா னாட்டு சி[றுகாட்டூர்] உடையான் மா

2 சேனன் மாதன் திருக்கோடிகாவான கண்ணமங்கலத்து ஸபையார் இடை [நா]ன் விலைகொண்டு உடைய கு[றை]யின் கிழக்கடைய எட்டு மாவும் முற்றிபெற்ற இன்நிலமும் போதைஞ்குடம் நீர் காவிரிநீர் அட்டுவோமானோம் திருக்கோடிகாவில் திருக்கோயி லுடையோம் இந்நிலம் எப்பேற்பட்ட [இ]றையும் எச்சோறுங் காத்து குடு

3 ப்போ(ம்)மானோம் சந்திராதித்தவல் காத்துக் குடுப்போமானோம் கண்ணமங்கலத்து ஸபையோம் கழஞ்சு பொன்னும் கொண்டு திங்கள் ஒரு குடம் தூணி கொள்ளும் குடத்தால் போதைங்குட நீர் அட்டுவோம்மானோம் இப்பொன் கொண்டு இதன் பலிசையால் குடம் கொண்டு அட்டுவோம்மானோம் திருக்கோயில்லுடையோம் இது ப

4 முயகல்படி இந்த ஸ்ரீவிமானத்தி(ல்)லே ஏற வெட்டினமையில் முன்னிவ்வாஜகம் வெட்டிக் கிடந்த தனிக்கல்லால் உபையோகம் இல்லாமையால் அது தவிர்ந்தது இது முட்டில் பன்மாயேஸ்வரர் கடை கூட்டப் பெற்றார்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 3 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 33 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ. க. தொ. XIX எண் : 72 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 23 |
| மன்னன் : | பரகேசரிவர்மன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழித் தென்புற அதிட்டானம்.

குறிப்புரை : இது பழைய கல்வெட்டு ஒன்றின் படி. திருக்கோடிக்கா மகாதேவர்க்கு இருங் கோளப்பாடி பரதூருடையான் [க]ம்பன் கலி என்பவன் நொந்தாவிளக்குக்காகத் தொண்ணூற்றாறு ஆடுகளை வழங்கியுள்ளதை இக்கல்வெட்டு கூறுகிறது. இத் தானம் வழங்கப்பட்டபோது, பிச்சதேவர் மேற்பார்வைப் பணி செய்ததாகத் தெரிகிறது.

*கல்வெட்டு :*

1 **ஸ்வஸ்திஸ்ரீ** இதுவும்மொரு பழங்கற்படி கோப்பரகேசரி **பந்மற்**க்கு யாண்டு ௩ ஆவது வடகரை நல்லாற்றூர் னாட்டு திருக்கோ

2 டிகாவில் **மஹாதேவ**ற்க்கு பிச்சதேவர் ஆராச்சியில் இருங்கோளப்பாடி பரதூருடையான் . ம்பன்கலி யொட்டி வைய்த்த நொந்தா விளக்கு க க்கும் வைய்த்த ஆடு தொண்ணூற்[று]*ஆறு ச(ந்)**ந்த்ர**ாதித்தவல் இது பழங்கற்படி இ(ந்)ந்த ஸ்ரீவிமானத்திலே ஏற வெட்டினமையில் முன்னிவாஜகம் வெட்டிக்கிடந்த தனிக் கல்லால் உபையோகம் இல்லாம்மையால் அது தவிர்[ந்]*தது பன்மாயே**ஸ்வ**ரர் கடை கூட்டப் பெற்[றார்[

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 11* |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 982 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 36 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIX எண் : 292 |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 24 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | உத்தம சோழன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் முன்மண்டபத் தென்புறப் பட்டிகை,

குறிப்புரை : முதலில் செங்கல்லால் கட்டப்பட்டிருந்த கோயிலைச் செம்பியன் மாதேவியார் கல்லாலே எடுப்பித்தார். அக்கோயிலுக்குச் செய்யப்பட்ட தானங்கள் தனித்தனிக் கல்லில் பொறிக்கப்பட்டுக் கோயிலில் வைக்கப்பட்டுப் பின்னர் சிதறிக் கிடந்தன. அவைகளையெல்லாம் புதிதாக எடுக்கப்பட்ட கற்கோயிலில் மீண்டும் பொறிக்குமாறு அவரே பணித்தார். அவ்வாறு பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களுள் இதுவும் ஒன்று என்ற முன்னுரையுடன் கல்வெட்டுத் தொடங்குகிறது.

கோமாறஞ்சடையனின் 4-ஆம் ஆண்டின் எதிர் 9-ஆம் ஆண்டில் (அதாவது 13-ஆம் ஆட்சி ஆண்டில்) திருக்கோடிக்கா மகாதேவர்க்கு, [நொந்தாவிளக்கெரிக்க மகேந்திரக் கோட்டூர் சபையாரிடம் பாண்டிய மன்னன் வரகுணமகாராஜன் 120 (கழஞ்சாகலாம்) பொன்னினை அளித்துள்ளான். அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டு அதன் வட்டி மூலம் நாழி நெய்யினைக் கோயிலுக்கு விளக்கெரிக்க நாள்தோறும் அளித்தல் வேண்டும் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** கோப்பரகேசரி பன்ம[ர்க்]கு யாண்டு ௰௧ ஆவது வடகரை நல்லாற்றூர் நாட்டு திருக்ரோடிக்காவில்[1] **மஹாதேவர்க்கு** ஸ்ரீஉத்தமசோழ தேவரை திருவயிறு வாய்த்த மழவரையர் மகளார்

2 **ப்ராந்தகன் மாதேவ[டிகளா]ராந** செம்பியந் **ம(ா)ஹ[ா]*தேவியார்** இதெவர்க்கு முன்னிட்டிடை[கப் படையாலு]ள்ள ஸ்ரீகோயிலைத் தவிர்த்து கல்லாலே ஸ்ரீவிமானமமைப்பித்து இதேவருடைய

3 படிகள் முன்பு **தம்ம**த்துக்கு வை[த்]து கற்களில் வெட்டிக் கிடந்த அவை வெவ்வேறு கல்லாய் பலவிடத்திலாய்க் கிடந்த அவை எல்லாம் இந்த ஸ்ரீவிமானத்தின் மேலே முன்

4 ஏற வெட்டிக் கொள்க என்று அருளிச் செய வெட்டினபடி முன் கிடந்த படிகளில் இது ஒருபடி. கோமாறன் சடையற்கு யாண்டு ச ஆவதி னெதிர் ஒன்பதாவது ஆ[2] . . . . .

5 ருக்கோடிக்காவில் **ம**ஹாதேவர்க்கு நொந்தாவிளக்கினுக்[கு] [வரகுண மஹாரா]ஜர் குடுத்த பொன் னூற்றிருபதின் . . . . . . இப்பொன் **மஹேந்த்ர**கோட்டூர் **ஸபை**யோங் ெ . . .

6 லிசையால் நிசதம் நாழி நெய் ராஜமார்த்தாண்டனுக்கு ஸ்ரீ . . . . . . . . . . ண் . சென்று திருக்கோயிலுடையார் . . . . . . . . . . குடுப்போமானோம் **மஹேந்த்ர**கோட்டூர் **ஸபை** . . . .

7 இந்த ஸ்ரீவிமாநத்திலே ஏற வெட்டிநமையில் முன்னிவ்வாஜகம் வெட்டிக்கிடந்த தனிக்[கல்லால் உ]பையோகம் இல்லாமையில் அது தவிர்ந்தது

---

* இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட தானம் கோமாறஞ்சடையனின் 13-ஆம் ஆட்சி யாண்டைச் சேர்ந்தது. எனினும் அது மீட்டெழுதப்பட்ட செம்பியன் மாதேவியார் வாழ்ந்த காலத்துப் பரகேசரிவர்மனான உத்தமசோழனின் 11-ஆம் ஆட்சியாண்டே இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலம். அதுவே இங்கு குறிக்கப்படுகிறது.

1 திருக்கோடிக்காவில் என வாசிக்கவும்.

2 புதிய கட்டடப் பகுதியினுள் மறைந்து விட்டது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 11 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 37 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XIV எண் : 21 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 25 |
| மன்னன் : | மாறஞ்சடையன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில்-முன்மண்டபத் தென்புற அதிட்டானக் குமுதம்.

குறிப்புரை : இது ஒரு பழைய கல்வெட்டின் புதிய படி. திருக்கோடிக்காவில் எழுந்தருளியிருக்கும் சரசுவதிக்கும், கணபதிக்கும் மூன்று நொந்தா விளக்குகள் எரிப்பதற்காக வரகுண மகாராசர் 180 கழஞ்சுப் பொன் கொடுத்ததைக் குறிக்கிறது. இப்பொன்னை ஏற்றுக் கொண்டு திருக்கோடிக்காவான கண்ணமங்கலத்துச் சபையினர், அதன் வட்டியிலிருந்து விளக்கெரிக்க ஒப்புக்கொண்ட செய்தியைத் தருகிறது இக்கல்வெட்டு.

**கல்வெட்டு :**

1 **ஸ்வஸ்திஸ்ரீ** [இதுவு மொரு படி] கோமாறன் சடையற்க்கு யாண்டு ௰[க] . . . . . . . . . . . . . . . . , . . .

2 றூர் நாட்டுத் திருக்கோடிகாவில் ஸ்ரீ **ஸர்ஸ்வ**தி **கணவ**திகளுக்கு மூன்று நொந்தா விளக்கெரிப்பதற்க்கு குடுத்த பொன் வரிகுண **மகர**ராஜர் குடுத்த பொன் நூற்றெண்பதின் கழஞ்சு இப்பொன்னின் பலிசையால் நிசதி நா . . . . . .

3 யில் அளந்து குடுப்போமானோம், திருக்கோடிகாவான கண்ண மங்கலத்து **ஸபை**யோம். இது பழ[ங்க]ல்படி இந்த ஸ்ரீ விமானத் திலே ஏற வெட்டினமையில் முன்னி . . . . . . . .

4 இது முட்டிற் பன்மாயே**ஸ்வ**ரர்க் கடைக்கூட்டப் பெற்றார்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 22 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 887 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 38 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.க.தொ. XII எண் : 74 |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 26 |
| மன்னன் : | நிருபதுங்கவர்மன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் முன்மண்டபத்தின் தென்புற அதிட்டானக் குமுதம், ஜெகதி

குறிப்புரை : பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனின் தேவியான வீரமகாதேவியார், ஹிரண்ய கர்ப்பமும் துலாபாரமும் ஆகிய வேள்விகளைச் செய்துள்ளார். அதிலிருந்து திருக்கோடிக்காவில் மகாதேவர்க்கு 50 கழஞ்சுப் பொன்னை அளித்துள்ளார். அதில் 25 கழஞ்சுப் பொன்னுக்கு வரும் வட்டி மூலம் நாள்தோறும் இருநாழி அரிசியும், ஒரு பிடி நெய்யும் கொடுக்க வேண்டுமெனவும், நொந்தா விளக்கிடுவதற்காக நாள்தோறும் உழக்கு நெய்யினை அளிக்க வேண்டுமெனவும் குறிக்கப்பட்டுள்ளது. இக்கொடையினை ஏற்றுக்கொண்டு இப்பணியினைச் செய்ய வேண்டியவர்கள், இவ்வூர்ச் சபையார் ஆவர்.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** இதுவும்மொரு பழங்கல்படி. யாண்டு இ[ருப]த்திரண்டு **ந்ருப**தொங்க **மஹா**ராஜதேவியார் வீரமாஹாதேவியார் **ஹிரண்யகர்ப்ப மும்** துலாபாரமும் புக்க பொன்னில் திருக்கோடிக்காவில் **மஹா** . . . .

2 த்த பொன் ஐம்பதின் கழஞ்சு இத[னில்] இருபத்தைங்கழஞ்சு பொன்னின் பலிசையால் நிசதி இருநாழி அரிசியும் ஒருபிடி நெய்யும் தளி அர்ச்சிப்பார் கை . . . .

3 ல் நிசதி உழக்கு நெய் தளி அற்சிப்பார் கைய்யிலே நொன்தா விளக்கு[க்கு] குடுபேமானோம். திருக்கோடிகாவான கண்ணமங்கலத்து **ஸபை**யோம் இது பழங்கல்படி இ . . . . .

4 உபையோகம் இல்லாமையில் அது தவிந்தது இதுமுட்டில் பன்மாயேஸ்வரர் கடைக் கூட்டப் பெற்றார்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 13 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 39 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | முத்தரையர் | ஊர்க் கல்வெட்டு எண் | 27 |
| மன்னன் : | இளங்கோ முத்தரையர் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் முன்மண்டபத் தென்புற அதிட்டான செகதி.

குறிப்புரை : கல்வெட்டின் தொடக்கமும், ஒரு பகுதியும் மட்டுமே உள்ளது. நாட்டு மன்றாடிகள் 50 ஆடுகளும், வேறொருவர் (யாரெனத் தெரியவில்லை) 100 ஆடுகளும் விளக்கெரிப்பதற்காகக் கொடுத்த கொடையினைக் குறிப்பதாகத் தெரிகிறது.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** இதுவும்மொரு பழங்[கற்படி] கோவிளங்கோ முத்தரையர்[ர்*]க்கு யாண்டு ௰௩ . . . . . . . . .

2 குடுத்த ஆடு னூறும் வழியும் [நா]ட்டை மன்றாடிகள் குடுத்த ஆடு ௫௰ ஐம்பது இது பழங்கற்படி இ(ந்)ந்த ஸ்ரீவிமானத்திலே ஏற வெட்டினமையில் முன்னிவாஜகம் வெட்டிக் கிடந்த தனிக் கல்லால் உபைே . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 19 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி.9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 27 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | தெ. க. தொ. XII எண் : 55 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 28 |
| மன்னன் : | நந்திவர்மன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழித் தென்சுவர்.

குறிப்புரை : திருக்கோடிக்காவில் இருக்கும் சிறுநங்கை ஈஸ்வரம் என்னும் கோயிலில் நந்தா விளக்கு எரிப்பதற்காக, ஆழிற்சிறியள் என்பவள் நூற்றுக்கலம் நெல்லினை மூல தனமாக வைத்துள்ளாள். அந்த நெல்லினை இக்கோயிலில் வழிபாடு நிகழ்த்தி வரும் ஆத்திரையன் நாராயணன் ஏறனும் மற்றும் அவன் தம்பிமார் மூவரும், பெற்றுக் கொண்டனர். அந்த நெல்லின் மூலம் வரும் வட்டியிலிருந்து விளக்கெரிப்பதற்காக நாள் தோறும், உழக்கு நெய்யினை அளிக்க ஒப்புக் கொண்ட செய்தியை இக்கல்வெட்டுக் கூறுகிறது. இதுவும் பழைய கல்வெட்டு ஒன்றின் புதிய படியே ஆகும்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஶ்ரீ இதுவும்

2 மொரு பழங்கற்படி யா

3 ண்டு நந்திப் போத்தரை

4 யற்க்கு பத்தொன்ப

5 தாவது திருக்கோடிகா

6 வில் சிறுநங்கை இஸ்வர(ா)கரத்

7 து மஹாதேவக்கு திருவிளக்கி

8 னுக்கு ஆழிற்சிறியள் குடுத்த நெல்
9 லு நூற்றுக்கலம் இன்னெல்லின் ப
10 லிசையால் நாள்வாய் உழக்கு நெய்
11 நொந்தா விளக்கெரிப்போமானோம் இது
12 தளி அ[ர்]*ச்சிப்போம் ஆத்திரையன் நா
13 ராயணன் ஏறனும் இவன் றம்பிமாரும்
14 இன்னால்[வரோ]ம் இது பழங்கற்
15 படி இந்த ஸ்ரீவிமானத்திலே
16 ஏற வெட்டின[மையில்] முன்
17 னி வாஜகம் வெட்டிக் கிட
18 ந்த தனிக்கல்[லால் உபை]யோகம் இல்லாமையால்
19 அது தவிர்த்து . . . . . . . . . . . .
20 நந்தி போ . . . . . . . ., .
21 டைக் கூட்டப் [பெற்றார்].

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 22 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 928 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 34 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 29 |
| மன்னன் : | முதற்பராந்தகன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழித் தென்சுவர்.

குறிப்புரை : திருக்கோடிக்கா மகாதேவர்க்கு விளக்கெரிக்க இரண்டு கழஞ்சுப் பொன் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிப்பதாகத் தெரிகிறது. நடுவில் கல்வெட்டு முழுவதுமாகச் சிதைந்து விட்டது. இதுவும் பழைய கல்வெட்டு ஒன்றின் புதிய படியே ஆகும்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ இது
2 வும்மொரு பழங்கற்
3 படி மதிரை கொண்ட
4 கோப்பரகேசரி பந்மற்
5 க்கு யாண்டு உ௰உ ஆவ
6 து நல்லாற்றூர் நா[ட்டு]
7 த் திருக்கோடிகாவில் மஹாதே
8 [வற்]கு நொ(த)ந்தா விளக்கினுக்கு[தற்]
9 . . . . குடுத்த தீப்பொ
10 [க்குச்செ]சம்பொன் நிருகழஞ்சு
11 . . ான . . . . மட . . . . தவிர

12 பன் . . . . . . . . . .

13 . . . ரெக . . . . . . .

14 . . . . . . . . . .

15 . . , . த்தவற் . . . . . . .

16 ல . . . . . . . . . .

17 . . டையோம் . . . . . . .

18 ழுங்கற்படி . . . . . . . இந்த ஸ்ரீ

19 விமானத்திலே ஏறவெ

20 ட்டினமையில் முன்னிவா

21 ஜகம் வெட்டிக் கிடந்த தனி

22 க்கல்லா[ல்] உ[பையோகம்]

23 இல்லாமையால் [அது தவிர்]

24 ந்தது பன்

25 மாய்யே[ஸ்வரர்]

26 கடைக் கூட்டப் பெற்றார்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 11 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 996 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 35 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 30 |
| மன்னன் : | முதலாம் இராசராசன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழித் தென்சுவர்.

குறிப்புரை : காவிரியின் தென்கரையில் உள்ள பனையூர் நாட்டுக் கொற்ற வாயிலைச் சேர்ந்த கொற்றவாயிலுடையான் இளையான் ஆதித்த பிடாரன் என்பவன் திருக்கோடிக் காவுடையார் கோயிலில் சூர்யதேவருக்கு ஒரு சிறு கோயில் எடுத்துள்ளான். அத்தேவருடைய சிறுகாலைச் சந்தி வழிபாட்டுக்காகப் பத்துக் காசினைத் திருக் கோடிக்காவில் திருக்கோயிலுடையார்களிடம் கொடையாக அளித்துள்ளான். அந்தப் பத்துக் காசின் வட்டியின் மூலம், இவ்வழிபாட்டின்போது திருவமுது படைப்பதற்காக நாள்தோறும் இருநாழி அரிசியினை இக்கோயிலுடையார்கள் கொடுக்க இசைந்ததையும் இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

**கல்வெட்டு :**

1 **ஸ்வஸ்திஸ்ரீ** சா
2 லை கலமறுத்த கோ
3 வி ராஜராஜ ராஜகேஸ
4 ரி பந்மற்க்கு யாண்டு
5 ெக ஆவது வடக
6 ரை நல்லாற்றூர் நாட்
7 டுத் திருக்கோடிகாவி

8 ல் திருக்கோயிலு
9 டையோம் தென்
10 கரை பனையூர் நாட்
11 டுக் கொற்றவாயி[ல்*]க் கொ
12 ற்ற வாயிலு[டை]யான்
13 இளையான் ஆதித்த பிடாரனிடைக்
14 கொண்ட காசு ௰
15 இக்காசு பத்தும் கொண்டு இவைச்சின் பலிசையால் இ
16 வன் திருக்கோடிகாவுடையார் கோயிலிலே எடுப்பித்த **சூர்யதே**
17 வர் கோயிலில் **சூர்யதே**வர்க்கு சிறுகாலை ஸந்திக்கு நிசதம்
18 இருநாழி அரிசியு[ந்] திருவமிர்துக்கு குடு
19 ப்போமானோம் **சந்த்ராதி**
20 த்தவல் திருக்கோயி
21 லுடையோ
22 ம் இது முட்
23 டில் **பந்மா**ஹே
24 **ஸ்வ**ரர் கடை
25 க் கூட்டப் [பெற்றார்].

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | [33] |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. [1047] |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 31 |
| மன்னன் : | முதல் இராசேந்திரன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் உண்ணாழித் தென்சுவர். அதிட்டான ஜகதிக்குக் கீழ் உள்ள சிறுகம்பு.

குறிப்புரை : மெய்க்கீர்த்திப் பகுதி மட்டுமே உள்ளது.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** திருமன்னிவளர இருநில மடந்தையும் பொற்செயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியுந் தன்பெருந் தேவிய[ாகி] இன்புற நெடுதுயிலூழியு ளிடைதுறைநாடுந் துடர் வனவேலிப் படர்வனவாசியும் சுள்ளிச் சூழ்மதிள் கொள்ளிப் பாக்கையும் நண்ணர்க்கருமு . . . . . . . . . ,

2 . . . . . முடியும் ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தெ(ன்னவர்) வைச்ச சுந்தரமுடியும் இந்திரநாரமும் தெண்டிரை ஈழமண்டல முழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர்புகழ் முடியும் செங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலைத் தொல்பெருங்காவல் பல்பழந்தீவும் மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி பந்மரான **ஸ்ரீராஜேந்த்ர** சோழதேவர்க்கு யாண்டு [௩௰௩]

அன்பளிப்பு
அமரர். ஆர். திருமலை. இ. ஆ. ப.
GIFTED BY
R. TIRUMALAI I.A.S. (La

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 200 / 1979

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 1* |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1119 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 43 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 32 |
| மன்னன் : | விக்கிரம சோழன் | | |

TAMIL NADU STATE DEPARTMENT ... MADRAS

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் மகாமண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : விருதராசபயங்கர வளநாட்டுக்கு உட்பட்ட நல்லாற்றூர் நாட்டுத் திருக்கோடிக் காவில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருக்கோடிக்காவுடையார்க்கு நொந்தா விளக்கெரிப்பதற்கான நெய்க்காக நிலம் கொடையாக வழங்கப்பட்டதை இக் கல்வெட்டு காட்டுகிறது. கொடுக்கப்பட்ட நிலம் இருமா வரை என்பதும், அதிலிருந்து வரும் நெல் முப்பத்து ஏழு (கலம்) என்பதும் குறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் இறுதிப் பகுதி கிடைக்கவில்லை.

**கல்வெட்டு :**

1 **ஸ்வஸ்திஸ்ரீ** திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கி
2 ரமசோழ தேவற்கு யாண்டு க ஆவது நாள்
3 ருயஅ முதல் விருதராஜ பயங்
4 கர வளநாட்டு நல்லாற்றூர்
5 நாட்டு உடையார் திருக்கோடிகா
6 வுடையாற்கு திருநுந்தா விளக்குக்கு

* ஆட்சியாண்டு 9-ஆக இருக்கலாமென இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை குறிப்பிடுகிறது.

7 நறுநெய் உழக்கினால் சந்த்ராதித்த

8 வற் செல்லக்கடவதாக ஊரு

9 க்கு கும்மாயபுறத்து வடபக்க

10 [த்]து கிழ(க்)கடையத் [தி]ருவுலகளந்தரு[ளி]

11 நபடி ரூ உப ச இந்நிலம் இரும

12 ாவரைக்கும் ௨ நூ௴ள இந்நெல்

13 லும் கொண்டு . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1122 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 44 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 33 |
| மன்னன் : | விக்கிரம சோழன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் மகாமண்டபத் தென் சுவர்.

குறிப்புரை : பரதாளூரைச் சேர்ந்த சங்கரதேவன் திருச்சிற்றம்பலமுடையான் என்பான், திருக்கோடிக்காவுடையாரை அமாவாசை தோறும் எழுந்தருளுவித்துத் தீர்த்த மாடச் செய்யும் ஏற்பாட்டுக்கு அளித்த நிலக்கொடையை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதற்காக இவர் அளித்த இரண்டுமா நிலத்திலிருந்து பெறும் 24 கல நெல்லினைக் கொண்டு, ஆண்டுக்கு வரும் 12 அமாவாசைகளிலும் இறைவனை எழுந்தருளுவிக்கச் செய்தல் வேண்டும். நிலத்தின் எல்லைகளும் குறிக்கப் படுகின்றன. அவைகளில் குறுக்கை வாய்க்கால், பூவேந்திரசோழன் வாய்க் கால் ஆகியன குறிக்கப்படுகின்றன.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவ[த்]*திகள்

2 ஸ்ரீவிக்ரமசோழதேவற்கு யாண்டு

3 ௪ ஆவது விருதராஜ பயங்கர [வளநா]

4 ட்டு நல்லாற்றூர் நாட்டு உடை

5 யார் திருக்கோடிகாவுடையார் [அம]

6 ரவா[ஸி] எழுந்தருளி தீர்த்தம்* பிரசாதித்த

7 [ருள] சந்திராதித்தவற் செல்லக்கடவிதா

8 க இத்தேவர் தேவதாநம் பழைய குறுக்கை
9 க வாய்க்காலிலும் இதின் கரை கொல்லையிலும்
10 நிலம் வடபார்க்கு எல்லை பூவேந்திரசோ
11 ழந் வாய்க்காலுக்கு தெற்கு . . . . . , . .
12 ல்லை காவேரிக் குலைக்கு . . . . மேல்
13 பார்க்கெல்லை தூம்பு எ . . . . கு கிழக்கும்
14 கீழ்பாற்க்கெல்லை இன்நில ஆசறுதிக்கு மேற்
15 கும் ஆக இவ்விசைந்த பெருநான்கெல்லையுள் ந
16 டுவுட்பட்ட நிலம் திருவுலகளன்தருளிநபடி நில
17 ம் இரண்டு மா இந்நிலம் இரண்டு மாவுக்கும்
18 நெல்லு இருபத்து நாற்கலம் இந்நெல்லு இருபத்
19 து நாற்கலமுங் கொண்டு அமாவாஸி பந்நிரண்டும் செ
20 ல்லக் கடவிதாக இந்நிலம் இருமாவும் திருத்தி வி[ட்டே]
21 ந் பரதாளூர் உடையான் சங்கரதேவந் திருச்சிற்றம்பலமு
22 டையாநேன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 45 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 34 |
| மன்னன் : | குலோத்துங்கன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் மகாமண்டபத் தென் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு இடையிடையே சிதைந்துள்ளது. இறுதிப் பகுதியும் கிடைக்கவில்லை. எனினும் கிடைத்துள்ள பகுதியிலிருந்து, பல்லவராசன் என்ற அதிகாரியின் விண்ணப்பத்தின்படி குலோத்துங்கன் விடுத்த ஆணையொன்றை இக்கல்வெட்டுக் குறிப்பதாகத் தெரிகிறது. இவ்வாணை, இக்கோயில் தேவகன்மிகளுக்கும், மகேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் இருக்கும் விருதராச பயங்கர வளநாட்டுக்கு நீர்பாய்வதற்காக முன்பு பழைய குறுக்கை வாய்க்கால் என்ற ஒரு வாய்க்கால் தோற்றுவிக்கப் பட்டது. அப்போது இக்கோயிலுக்குரிய தேவதான நிலப்பகுதிகளிலும் அவ் வாய்க்கால் தோண்டப்பட்டது. ஆனால் இப்போது மீண்டும் இராசேந்திர சோழச் சதுர்வேதி மங்கலத்தின் கிழக்கே கடுவன் வாய்க்காலென்ற ஒரு வாய்க்கால் புதிதாக அமைக்கப்பட்டு விட்டதால், (முன்னது பயன்படவில்லை போலும்) முதலில் தோண்டப்பட்ட தேவதான நிலப்பகுதிகளை மீண்டும் தூர்த்துக் கோயிலுக்கே அளிக்க வேண்டும் என்று ஆணையிட்டதாகத் தெரிகிறது.

*கல்வெட்டு :*

1 **ஸ்வஸ்திஸ்ரீ** குலோத்துங்க சோழன்

2 [கோ]நேரிஇன்மை கொண்டான் விருத[ராஜ]

3 பயங்கர வளநாட்டு நல்லாற்றூர் நா[ட்டு]

4 திருக்கோடிகாவுடையார் கோயிலில்

5 தேவகன்மிகளுக்கும் **ஸ்ரீமஹேஸ்[ஸ்வர]**
6 கண்காணி செய்வார்களுக்கும் விருத[ராஜ]
7 பயங்கர வளநாட்டுக்கு நீர்[பாய்ச்சி]
8 ந பழைய குறுக்கை வாய்க்கால் . . . .
9 ரத்து அகரம் ராஜேந்த்ர [சோழச் சதுப்பேதிமங்]
10 கலத்துக்குக் கிழக்குக் கடுவன் வாய்க்காலு . . . .
11 லி விட்டதென்று பழைய குறுக்கை வாய்க்கால் க
12 ல்லுகிறபோது இத்தேவதேவதாநமாந நிலத்
13 தி[லே] கல்லிவிட்டதென்றும் இன்நிலம் பழைய
14 படியே தூர்த்து இத்தேவர்க்கு தேவதாநமாக . . . .
15 பெறவேணும் என்றும் பல்லவராஜந் நமக்குச்
16 [சொந்ன] இத்தேவர் தேவதாநமாந நிலத்து பழ
17 ய குறுக்கை வாய்க்காலகப்பட நில . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 35 |
| மன்னன் : | — | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் மகாமண்டபத் தென்புற அதிட்டானம்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. கோயிற்காணியுடைய பெருமக்கள், இரண்டு திருமஞ்சனக் குடமும், சந்தி விளக்கும் அளிக்கப் பொறுப்பேற்றுக் கொண்டதை இக்கல்வெட்டுப் பகுதி குறிக்கிறது.

**கல்வெட்டு:**

1 ... ... ... யும் இரண்டு திருமஞ்சனக் குடமும் ஒரு சந்தி விளக்கும் சந்த்ராதித்யவற் செலுத்தக் கடவோமாநோம் இக்கோயிலில்க் காணியுடைய நாங்களும் எங்கள் ப்ராப்தியாலும் ராஜநியோகத்தாலும் அனுபவிப்பாரே இத்திருவமுது செலுத்தக் கடவோமாக இசை....

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 42 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1112 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 46 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 36 |
| மன்னன் : | முதற் குலோத்துங்கன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் மகாமண்டபத் தென்புற அதிட்டானம்.

குறிப்புரை : இராசராசப் பாண்டி நாட்டு முத்தூர்க் கூற்றத்தைச் சேர்ந்த தென்றலையுடையானாகிய மணிக்கிராமன் வடுகநாதனான சுந்தர மூவேந்த வேளான் என்பார், திருக்கோடிக்காவுடையார் கோயில் சிவப்பிராமணர் சிலரிடம், நாற்கழஞ்சுப் பொன் கொடுத்துள்ளார். இப்பொன்னை ஏற்றுக் கொண்டு, ஒரு உழக்கு பசுவின் நெய்யை இரவும் பகலும் நுந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்காகக் கொடுக்க இசைந்ததைக் குறிக்கிறது இக்கல்வெட்டு.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேசரிபந்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்க்கு யாண்டு நாற்பத்திரண்டாவது மகரநாயிற்று பூர்வபக்ஷத்து உத்திராடமும் [ப்ரதி]பதமும் பெற்ற திங்கள்கிழமை நாள் விருதராஜ பயங்கர வளநாட்டு நல்லாற்றூர் நாட்டு உடையார் திருக்கோடிகாவுடையார் கோயில்காணி உடைய சிவப்பிராமணரில்

2 பாரத்துவாஜி கூத்தாடி திருவாகீஸ்வரமுடையானும் ஆத்திரையன் தில்லைநாயகன் கோலமநவநும் உள்ளிட்ட சிவப்ராஹ்மணரோம் இத்தேவர்க்கு ராஜராஜப் பாண்டிநாட்டு முத்தூர்க்கூற்றத்து

தென்றலை உடையான் ம[ணி]க்கிராமன் வடுகநாதநான வளவ சுந்தர மூவேன்தவேளாநிடை நாங்கள் உபையங்கொண்ட செம்பொந் நாற்கழஞ்சிநால்

3 சன்திராதித்தவற் இரவு பகல் பசுவி[ந்]*நெய் உழக்கால் ஒரு திருநுந்தா விளக்கெரிக்க இக்[கோ]யிலில் காணியுடைய நாங்களும் எங்கள் ப்ராப்தியாலும் ராஜநியோகத்தாலும் அநுபவிப்பார் இத்திரு விளக்கெரிக்க கடவோமாக இசைந்து இப்பொந் கொண்டோம் இது சிவப்ராஹ்மணரோம் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | [3] |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. [1121] |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 41 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 37 |
| மன்னன் : | விக்கிரமசோழன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் மகாமண்டப வடசுவர்க் குமுதம்.

குறிப்புரை : விக்கிரமசோழன் மெய்க்கீர்த்தியுடன் இக்கல்வெட்டுத் தொடங்குகிறது. கல்வெட்டு, பெரிதும் சிதைந்துவிட்டது. இவ்வூர் மகாசபைப் பெருமக்கள் கோயிலில் கூடி எடுத்த முடிவினைத் தெரிவிக்கிறது. ஆதிசண்டேசுவர தேவரிடம் விற்றுக்கொடுத்த விலைப்பிரமாணம் இது. இக்கோயிலின் செப்புத் திருமேனிகளுக்குத் திருவமுது மற்றும் நாள்தோறும் செய்யவேண்டிய நிவந்தங்களுக்காகச் செய்த ஏற்பாட்டினைத் தெரிவிப்பதாகத் தோன்றுகிறது.

**கல்வெட்டு :**

1 பூமாலை மிடைந்து பொன்மாலை திகழப் பாமாலை மலிந்த பருமணித்திரள் புயத்திரு நிலமடந்தையொடு ஜயமகள் [திருப்] பு[ய]த்தி . . . . . . . . . . ளொரு தனி[இ]ருப்ப கலைமகள் சொற்றிறம் புணர்ந்து கற்பினளாகி விருப்பொடு நாவகத்திருப்ப திசைய்தொறுந் திகிரி உயரச் செங்கோல் . . . .

2 . . . . . . . . . து வடபிலத்திடைக் கிட . . . . . . . . . .

3 ௩ ஆவது மகரநாயற்று பூர்வபக்ஷத்து ஷஷ்டியுந் திங்கள்கிழமை பெற்ற உத்தி[ர]*ட்டாதி

4 . . க்கொண்ட சோழச் சருப்பேதிமங்கலத்து **ம(ர)ஹர ஸபையோம்** இவ்வூர் திருவே . . . . . . . டையார் கோயிலில் எடுத்துக் கட்டியிலேய் கூட்டங்குறைவறகூடி இருந்து உடையார் திருவா வடுதுறையுடையார்க்கு மூல**[வ்ருத்யரா]**கிய **ஆதிசண்டேஸ்வர** தேவற்கு னாங்கள் விலை இறையிலி **ப்ரமாணம்** பண்ணிக்குடுத்த பரிசாவது இத்திருவாவடுது[றை]* பெருமாள் திருவாய்மொழிந்தருள திருமேநிக்கு . . . , . .

5 திருமேநிகளுக்கு திருவமுது நித்த நிவந்தங்கள்ளுக்கும் இத்தேவ[ர்]* களை . . . திருமஞ்[ச]*நமுள்ளிட்ட பூஜைகளுக்கு . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 56 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 38 |
| மன்னன் : | விக்கிரமசோழன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுக் கிழக்குச்சுவர். வாயிலின் வடபுறம்.

குறிப்புரை : திருக்கோடிக்கா கோயிலின் இரண்டாம் திருச்சுற்று மாளிகை விக்கிரம சோழன் பெயரால் வழங்கியிருக்கிறது என்பதனை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம

2 சோழன் திருமாளிகை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 25 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1203 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 48 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 39 |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயிலின் முதல் திருச்சுற்றில் உள்ள கரையேற்றும் விநாயகர் கோயில் வடசுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் முன்பகுதி மட்டுமே உள்ளது. எனவே செய்தியை முழுவதுமாக அறிந்து கொள்ள இயலவில்லை. கோயிலைச் சேர்ந்த பல திருநந்தவனங்களும், வேறு பல நிலங்களும் குறிக்கப்படுகின்றன.

**கல்வெட்டு :**

1 **ஸ்வஸ்திஶ்ரீ** திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும்
2 ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொ
3 ண்டருளிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்
4 டு இருபத்தஞ்சாவது மீனநாயற்று அபர பக்ஷத்து
5 **த்வீ**தியையும் சனிக்கிழமையும் பெற்ற சித்திரைநாள் வி
6 ருதராஜ பயங்கர வளநா[ட்]*டு நல்லாற்றூர் நாட்டு உடை
7 யார் திருக்கோடிகா உடையார் தரம்மிலி நிலங்களிலு
8 ம் சிவநாமத்துக் காணிகளிலும் ஊர்க்கீழ் இறையிலிக
9 ளிலும் இற்றைநாள்[வ]ரை சண்டேசுர விலை வில்லாதே கி

10 (ட)ந்த எதிரிலாப் பெருமாள் கமுகு திருநந்தவனம் உள்ளி(ட்)ட

11 திருநந்தவனங்களாய் விக்கிரமசோழன் திருவீதிக்கு

12 உள்பட்ட திருநந்தவனங்களும் இத்திருவீதிக்குப் புறம்புபட்

13 ட அன்னதான வகை திருநந்தவனமாய் . . . . . . . . தி

14 ருத்தி நெல்பயிர் செய்(து)வருகிற விளைநிலம் காலே சிந்நமும் இ

15 தந்தெ[ற்]*கு கனகராய விழுப்பரையன் பக்கல் சிவநாமத்துக் காணியாக கொ

16 ண்ட கொல்லை நிலம் ஒ(ரு) மாச்சின்னமும் சோளேந்திரசிங்கன் மாநிலை திருநந்

17 தவனம் வேலியும் இராஜராஜந் திருநந்தவனமும் புவனமுழுதுடையாள் தி . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 50 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 40 |
| மன்னன் : | — | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுத் தெற்குச் சுவர். கல்வெட்டு.

குறிப்புரை : சித்திரமேழிப் பெரிய நாட்டவரையும், சோழ மன்னனையும் வாழ்த்தும் பாடற் கல்வெட்டு.

***கல்வெட்டு :***

1 **ஸ்வஸ்திஸ்ரீ** வாழி கற்பகோடி வாழி ஆழிசூழி வை[ய்]*யகம் வாழி கற்பகோடி வாழி சொழதுங்கன் வல்லியம் வாழி கற்பகோடி வாழி சித்திரலேகை மன்னரே வாழி கற்பகோடி வாழி சித்திரமேழி வாழி வாழ்கவே

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 20 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1236 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 51 / 1931 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 41 |
| மன்னன் : | மூன்றாம் இராசராசன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கொயில் - இரண்டாம் திருச்சுற்றுத் தென்சுவர்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. மெய்க்கீர்த்தியுடன் தொடங்கி, ஆண்டுப் பகுதிவரை மட்டுமே கிடைத்துள்ளது.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** சீர்மன்னி இருநான்கு திசை விளங்கத் திருமடந்தையும் போர் மன்னும் ஜயமடந்தையும் புவிமடந்தையும் மணம்புணர அருமறையின் நெறிவாழ அருந்தமிழோரி . . . வாழப் பொருவில் மனுநெறி வாழப் பொன்ம[குட]ங் கவித்தருளி

2 வெங்கோபக் கருங்[கலிப்பகை] விடநாகர் பெலம் படரச் செ[ங்]கோலுங் கொடிப்புலியும் திகிரிவரை வாழி ப[ள]க்காண்டி சாமுத்தேன் காக்கும் எடுத்த தனிக்கூடமென்ன அண்டகயமும் [ஏ]ந்து முழுமதிக்குடை [நி]ன்றழ கெறிப்ப புலந் திகிரி பதினான்கு புவனங்களும் மடிப்படுத்த இலங்குகதிர் பட்ட மேருவில் இருந்த வயப்புலி யேறென்னச் செம்பொன் வீர ஸிங்காஸனத்து புவனமுழுதுடையாரோடும் வீற்றிருந்தருளிய கோஇராசகேசரி பமரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராச தேவர்க்கு யாண்டு உய துலாநாயற்று அபரபக்ஷத்து த்ரயோதசியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற உத்திரத்து நாள் . . . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 42 |
| மன்னன் : | விக்கிரம சோழன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் இரண்டாம் திருச்சுற்றுக் கிழக்குச் சுவர் வாயிலின் தெற்குப் புறம்.

குறிப்புரை : இரண்டாம் திருச்சுற்று மாளிகை விக்கிரமசோழன் பெயரில், விக்கிரம சோழன் திருமாளிகை என்று அழைக்கப்பட்டதைப் போல, இத்திருச்சுற்றும், விக்கிரம சோழன் திருவீதி' என்றழைக்கப்பட்டது.

கல்வெட்டு :

1 **ஸ்வஸ்திஸ்ரீ** விக்கிரம

2 சோழன் திருவீதி.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 20 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1197 |
| ஊர் : | திருக்கோடிக்கா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 52 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 43 |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | | |

இடம் : திருக்கோடிக்காவுடையார் கோயில் - இரண்டாம் திருச்சுற்றுக் கிழக்குச் சுவர் - வாயிலின் தென்பகுதி.

குறிப்புரை : விருதராச பயங்கர வளநாட்டைச் சேர்ந்த திருக்கோடிக்காவுடையார் கோயிலில் உள்ள நடராசப் பெருமானுக்கு, மார்கழித் திருவாதிரையன்று திருமஞ்சனம் (திரு நீராட்டு) செய்வதற்காக உதையன் உடையான் ஆன தில்லை அம்பல விழுப்பரையன் என்பவன் நிலக்கொடை அளித்ததை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இந் நிலம், வேறு ஒருவரிடம் விலைக்கு வாங்கிக் கொடையாக அளிக்கப்பட்டுள்ளது.

கண்ணமங்கலம் நெறியுடைச் சோழச் சருப்பேதிமங்கலம் என்ற பெயர் கொண்டிருந்ததையும் இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. நடராசப் பெருமான், 'கொட்டமைந்த ஆடலார்' என்று அழைக்கப்பெற்றிருப்பது அறிந்தின்புறத் தக்கது.

**கல்வெட்டு :**

1 **ஸ்வஸ்திஸ்ரீ** திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையு மீழமுங் கருவூரும் பாண்டியன் முடி

2 த்தலையுங் கொண்டு வீர அபிஷேகமும் [வி]சயா அபிஷேகமும் பண்ணி அருளி[ன]

3 ஸ்ரீதிரிபுவனவீரதேவர்க்கு யாண்டு உO ஆவது தனுநாயற்று பூர்வ பக்ஷத்துத் தி

4 ரையோதெசியும் திங்கள் கிழமையும் பெற்ற மிருகசரத்து[1] னாள் விருதராசப் பயங்

5 கர வளனாட்டு உடையார் திருக்கோடிகா உடையார் கோயில் கூத்தாடும் நாயனா

6 ர் கொட்டமைந்த ஆடலார்க்கு திரு[மா]ர்கழித் திருவாதிரைக்கு திருமஞ்சனப் புறமா

7 க இவ்வூர் திருக்காக்கள்ளி நியாயத்த[ாரி]ல் உதையன் உடையா னான தில்லை அம்பல

8 விழுப்பரையனேன் இந்நாயனார் தேவதானம் கண்ணமங்கலமான நெறிவுடை

9 ச்சோழச் சருப்பேதி[மங்கலத்து] . . . . வேலிக்கண்டத்து வில்லி குனித்தான் அகமுடையா

10 ள் விலைகொண்டுடை . . . . . நா[ங்களே] கடமை இறுத்து வருகிற

11 நிலமாய் என்னு[தான]. . . . . . . . . . . . . விட்டேன் வ இந்நிலங் காலுக்குக் கீழ்

12 . . . . . . . . . . . . . . . தென்பாற்கெல்லை மேற்படி

13 நிலத்துக்கு வடக்கும் மே[ல்பாற் கெல்லை இக் கண்டத்துக்குக் கிழக்கும் குளத்துக்கு

14 வடபாற்க்கு எல்லை கொற்றக்குறும்பூர் எல்லைக்குத் தெற்கும் ஆக இவ்விசைந்த பெருனாந்கெல்

15 லையுள் நடு[வு]பட்ட நிலங்காலும் திருமஞ்சனப்புறமாக மிகுதி குறைவுள்பட திரு

16 நாமத்துக் காணியாக விட்டுக் குடுத்தேன் உதை(த)யஞ் செய்தான் உடையானான தில்லை

17 அம்பல விழுப்பரையனேன் இவை என்னெழுத்து இன்னிலம் சந்தி ராதித்த வரை செல்வ . . . . . . .

18 இப்படி அறிவேன் . . . . . . . . . . . . . . .

---

1 மிருக சீரிடம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 22 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. - 1265-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருக்கோடிகா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 54 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ. க. தொ. XII எண் : 222 |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 44 |
| மன்னன் : | கோப்பெருஞ்சிங்கன் | | |

இடம் : திருக்கோடிகாவுடையார் கோயில் இரண்டாம் திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் வாயிலின் தென்புறம் உள்ளது.

குறிப்புரை : திருக்கோடிகா உடையார் கோயில் தேவகன்மிகள், கங்கைகொண்ட சோழபுரத்தில் இருக்கும் மனுவூருடையார் வலந்தரும் கூத்தப் பெருமாளுக்கு எழுதிக்கொடுத்த பிரமாண இசைவுத் தீட்டு இது. தியாக விநோத விழுப்பரையரின் காணியான அரைமாவும், இவரது குருவான வலந்தரும் கூத்தப்பெருமாளுக்குக் கொடையாகக் கொடுத்த நிலம் அரைமாவும் ஆக ஒருமா நிலம் இறையிலி செய்து கொடுக்கப் பட்டது.

இந்நிலம் இறையிலி செய்து கொடுத்ததற்கு மாற்றாக, இக்கோயிலின் தேவதானம் கண்ணமங்கலத்திலுள்ள இரண்டு மா நிலத்தினைத் திருநாமத்துக் காணியாக்கி, அதிலிருந்து வரும் நெல்லினைப் பண்டாரத்தில் அளக்க வேண்டும் எனவும், அந்நிலத்தினைத் திருநாமத்துக் காணியாக அளிக்க வேண்டுமெனவும் இக்கோயில் தானத்தாரும், மாஹேஸ்வரரும் வேண்டிக் கொண்டதற்கிணங்க இது அளிக்கப் பட்டதை இக்கல்வெட்டுச் சுட்டுகிறது. மேலும் திருக்கோடிகாவுடையார் கோயில் திருப்பணிக்கு 150 காசு கொடுக்கப்பட்டதையும் இக்கல்வெட்டு மூலம் அறிகிறோம்.

வலந்தரும் கூத்தப் பெருமாள் ஒரு குரு என்பதையும், அவர் இத்திருக்கோடி காவுடையார் கோயிலில் குருஸ்தானமாகத் திருப்பெருந்துறை ஆளுடையாரை எழுந்தருளுவித்தார் என்ற செய்தியையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கோயில் கணக்கர், தேவகன்மி, ஸ்ரீகார்யம், சைவாச்சார்யர், மாஹேஸ்வரக் கண்காணி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். கல்வெட்டு இடையிடையே பெரிதும் சிதைந்து விட்டதால் தெளிவாகத் தொடர்ச்சியாகப் புரிந்துகொள்ள இயலவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்ரீஸ்வஸ்தி சகலபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு உ௰உ இருபத்திரண்டாவது . . . . . . . . . . பக்ஷ . . . . . ம் வியாழக் கிழ

2 மையும் பெற்ற உரோசணி நாள் விருதராஜ பயங்கர வளநாட்டு நல்லாற்றூர் நாட்டு உடையார் திருக்கோடிகாவுடையார் தெ . . . . . . . [தேவகன் மிகளோம்] இறை [முறை]

3 ப் பிரமாண இசைவு தீட்டு கங்கை கொண்ட சோழபுரத்து இருக்கும் மனுவூருடையார் வலந்தரும் கூத்த பெருமாளுக்கு இன்னாயனார் [தேவதானம்] திருகோடிகாவில் [தியாக]

4 (க) வினோத விழுப்பரையர் காணியான அறுபது வரிசையும் [அந்தரா] யமும் இறுக்கும் கொல்லையில் இவர் பக்கல் விலைகொண்ட நிலம் அரைமாவும் இவர் தங்கள் குருக்கள் வலந்

5 தரும் கூத்தப்பெருமாளுக்குத் தானமாகக் குடுத்த நிலம் அரைமாவும் ஆக ரூ ஒருமாவினால் குழி நூறும் இக்குழி நூறும் இப்படியால் கொண்டு குருஸ்தானமாகத் திருப்[பெ]

6 ருந்துறை ஆளுடையாரைத் தேவர்களோம் தேவர் திருமுகமும் கொண்டு வந்து இன்னாயனார் கோயில் ஸ்தானத்தார்க்கும் இவ்வூர் திருக்காக்கள்ளி நியாயத்திலார்க்கும் காட்ட இவ

7 . . . கூடித் திருப்பெருந்துறை ஆளுடையாரை பிரதிஷ்டித்தமையில் இன்னிலத்துக்கு வைக்கும் நெல்லு அறுகலத்துக்கும் இன்னிலக் குழி நூறும் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் ஆகையி

8 ல் இன்னிலத்தால் நெல்லு இறையிலி செய்ய வேண்டுகையில் இந்நெல்லு அறுகலத்துக்கும் இந்நா[ய]*னார் தேவதானம் கண்ண மங்கலம் நூற்று அறுபதின்கலம் வரிசை இறுக்கும் நிலத்து தே

9 வர்க்கு இறைமுறைமையால் வரும் நெல்லு நீக்கி [இறை]மிகுதி வரும் நெல்லு அறுகலத்துக்கும் விற்ற இன்னிலக்குழி நூற்றுக்கு . . . . . . . . . . . . . . . . . . . . . .

10 லுக்கு உடலாக கொண்டு இக்கொல்லை நிலக்குழி நூறும் இவர் எழுந்தருளுவித்த திருப்பெருந்துறை ஆளுடையார் இறையிலியாக அனுபவிக்கக் கடவாராகவும் இக்கோ . . . . . . . . .

11 னால் இறுக்கும் நெல்லு அறுகலத்துக்கு இன்னாயனார் தேவதானம் கண்ணமங்கலத்துக் கொண்டு விட்ட குழி இருநூறினால் இன்னிலம் இரண்டு மாவும் [திருநாமத்துக் காணியாக] . . . . . . .

12 கடவராகவும் சம்மதித்து இறைமுறைமை ப்ரமாணம் பண்ணினமையில் இன்னிலம் இரண்டுமாவுக்கும் உய்யக்கொண்டார் வளநாட்டு திரு நாகிஸ்வரத்து இருக்கும் வியாபாரிகளில் . . . மருதாநங் கிழவன் வீதி விடங்கப் . . . . . . .

13 பெருமான் பக்கல் விலைகொண்ட ப்ரமாணம் உடையார் திருக் கோடிகாவுடைய நாயனார் ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கினமையில் முன்னாளில் திருப்பெருந்துறை ஆளுடையாரைப் பிரதிஷ்டிக்கிற இடத்து இன்னாயனார் தேவதானம் திரு

14 கோடிகாவில் கொல்லைநிலத்து விலைகொண்ட தானத்தாலும் தியாகவினோத விழுப்பரையர் பக்கல் பெற்ற குழி நூற்றினால் நெல்லு அறுகலத்துக்கும் நெல்லு . . . த்தல் இன்னிலத்துக்கு . . . . . . . . .

15 ம் இரண்டுமாவும் திருநாமத்துக்காணியாகக் கொண்டு தருதல் செய்ய வேணுமென்று இக்கோயில் தானத்தாரும் ஸ்ரீமாஹேஸ்வரரும் சொ[ன்னமையில்] . . . . . னாயனார் இத் . . .

16 . . . னத்தே திருநாமத்துக் காணியாகக் கொண்டு [தருவ] தாகவும் இக்கொல்லை நில[த்து]*க்கு நெல்லு இத்திருப்பெருந்துறை ஆளுடையார்க்கு . . . . . வுதாகவும் இத்தியாக வினோத விழுப்பரையர் ஸ்ரீபண்டாரத்துக்கு கடவ . . . .

17 த்திருகையில் இன்னிலக்குழி இருநூற்றுக்கும் மருதாநங்கிழவன் வீதிவிடங்கப் பெருமான் பக்கல் கொண்ட திருநாமத்துக் காணியாக விட்டு விலைகொண்ட பணமும் ஸ்ரீபண்டாரத்துஒடுக்கித் தியாக வினோத விழுப்பரையர் இடத்தும் [இச்]ஸ்ரீ

18 பண்டாரத்தினின்றும் இவர்க்கு[ப்புறவும்] இறையிலிக்குழி நூற்றினால் [இ]றுக்கும் நெல்லு [அ] கலமும் இன்னிலத்தால் [வருவனவும்] இத்திருப்பெருந்துறை ஆளுடையார்க்கு இறையிலி செய்து குடுத்த . . . . . க்கும் நெல்லுக்கு . . . . . . .

19 [ஒ]டுக்கிக்குடுத்த நிலக்குழி இருநூறும் கை(ய்)க்கொண்டமைக்கும் உடையார் திருக்கோடிகாவுடைய நாயனார் திருநடை மாளிகையிலே கல்லில் வெட்ட இத்திருப் பெருந்துறை ஆளுடையார் ஸ்ரீகோயிலிலே [இந்நி]லக்குழி நூற்றினால் நெல்லு அறுகலத்து

20 க்கும் இறையிலி செய்து குடுத்தமைக்கும் நெல்லுக்கும் [கட்டியாக] விற்ற திருநாமத்துக்காணியாக[க்] கொண்டு . . . . விளை நிலக்குழி இருநூறும் கைக்கொண்டமைக்கும் [இத்திருப்பெருந்துறை] ஆளுடையார் . . . . . . . . . கல்லுவெட்டிக் குடுக்கக் கடவதாகவும் சம்மதித்து

21 இறைமுறைமை செய்து குடுத்தமைக்கு உடையார் திருக்கோடிகாவுடையார்க்கு திருப்பணிக்கு உடலாக குடுத்த காசு நூற்று ஐம்பது இக்காசு நூற்று ஐம்பதும் இறைமுறைமை செய்து குடுத்தோம் இ

22 ப் பெருந்துறை ஆளுடையாரை எழுந்தரு[ளு]வித்த மனுவூருடையார் வல[ந்த]ரும் கூத்தப் பெருமாளுக்கு உடையார் திருக்கோடிகாவுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர் கன்மிகளோம் இப்படிக்கு இவை கோயில் கணக்கன் கண்ணமங்கலமுடையான் [விக்]

23 னேஸ்வரப் பிரியன் எழுத்து இப்படிக்கு இவை தேவர்கன்மி கோயிற் பட்டன் எழுத்து இவை தேவர்க[ன்மி] சிற்றம் பலப்பட்டன் எழுத்து இப்படிக்கு ஸ்ரீகார்யம் கா . . . . டையான் எழுத்து இப்படிக்கு இவை இக்கோயில் சைவ்வாசாரியம்

24 வாஜ பண்டிதன் எழுத்து இப்படிக்கு இவை பெரியநம்பி பட்டன் எழுத்து இப்படிக்கு இவை திருஞானசம்பந்தன் எழுத்து இப்படிக்கு(க்கு) இவை தி]ரு]ச்சிற்றம்பல பட்டன் மகன் ஆவுடையான் எழுத்து இப்படிக்கு இவை ஸ்ரீமாஹேஸ்வர கண்காணி கோட்ட

25 முடையான் திருஞானசம்பந்தன் எழுத்து இப்படிக்கு இவை தேவர்கன்மி உத்தமபட்டன் எழுத்து இப்படி அறிவேன் [காணி]யுடையான் புலியூர் நாட்டு விழுப்பரையனேன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 35 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1278-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருக்கோடிகா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 53 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தெ. க. தொ. XII எண் : 136 |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 45 |
| மன்னன் : | கோப்பெருஞ்சிங்கன் | | |

இடம் : திருக்கோடிகாவுடையார் கோயில்-இரண்டாம் திருச்சுற்று கிழக்குச்சுவர்-வாயிலின் தென்புறம் உள்ளது.

குறிப்புரை: செயங்கொண்ட சோழபுரமான சிங்கபுரநாட்டுக் காணியுடைய பாக்கமுடையான் பஞ்சனஉடையபிள்ளை என்பவர் திருக்கோடிகாவுடையார்க்குத் திருநாமத்துக் காணியாக நிலம் வழங்கியமைக்கான பிரமாண இசைவுத்தீட்டு இது. இவர் வழங்கிய நிலம் ஒருமாவரை. திருக்கோடிகாவுடையார் கோயில் சைவாசாரியம் செய்யும் கௌசிகன் திரிபுவனசுந்தரன் தெக்கிணாமூர்த்திபட்டன், இவன் தம்பி கற்பகரான திரிபுவன சுந்தரபட்டன் என்பவர்களிடம் இருந்து விலைக்கு வாங்கி வழங்கியிருக்கிறார். நிலத்தின் எல்லைகள் சொல்லப்படும் போது சினசிந்தாமணிபுரம் என்ற ஊரும், ஆலாலசுந்தரன் நந்தவனமும் குறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1 **ஸ்ரீஸ்வஸ்தி** சகலபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு ௩௫-வது **இஷப** நாயற்று **பூர்வபக்ஷத்து தசமியும்** செவ்வாய்க் கிழமையும் பெற்ற அத்தத்து நாள் விருதராச பயங்கர வளநாட்டு

2 நல்லாற்றூர் நாட்டு உடையார் திருக்கோடிகாவுடையார் கோயிலில் ஆதிசண்டே**ஸ்வ**ர தேவர்கன்மிகளுக்கு செயங்கொண்ட சோழ மண்டலமான சிங்கபுரநாட்டு இளமங்கலத்துக் காணியுடைய பாக்

3 கமுடையான் பஞ்சனஉடைய பிள்ளையேன் இன்னாயனார்க்கு திருநாமத்துக் காணியாக நீர்வார்த்துக் குடுத்த நிலத்துக்கு பிரமாண இசைவுத் தீட்டுக் குடுத்த பரிசாவது இன்னாயனார் தேவதானம் திருக்கோடிகா

4 க்கீழைத் திருவீதி வால்நீளத்து இக்கோயில் சைவாசாரியம் கௌகஸன்* திரிபுவனசுந்தரன் தெக்கணாமூ[ர்*]த்தி பட்டனும் இவன் தம்பி கற்பகரான திரிபுவனசுந்தர பட்டனும் பக்கல் விலை கொண்டுடை யேனாய் என்

5 னுதாயிருந்த நிலமாய் இன்னாயனார்க்குத் திருநாமத்துக் காணியாகக் குடுத்த நிலத்துக்குக் கீழ்பாற்கெல்லை சினசிந்தாமணி புரத்து வியாபாரிகள் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை ஆலா

6 ல சுந்தரன் திருநந்தவனத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை திருவீதி வால்நீளத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை ஆனாங்[கூருடை]யான் கொல்லைநிலத்துக்குத் தெற்கு இன்னான் கெல்லையுள் நடுவு

7 பட்ட மிகுதிக் குறைவுட்பட ரூ [ஒரு மா அரை**] இன்னிலம் ஒருமா வரையும் திருநாமத்துக் காணியாக நீர்வார்த்துக் குடுத்தேன் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளுக்குப் பாக்கமுடையான் பஞ்சன உடைய பிள்ளையேன் இன்னி

8 லத்து மேல்நோக்கின மரமும் கீழ்னோக்கின கிணறும் பொதுவும் போதாதியும் எப்பேர்ப்பட்ட உரிமைகளகப்பட திருனாமத்துக் காணி[யாக]க் குடுத்தேன் இன்னிலத்துக்கு இக்கோயில் தானத் தார் வேண்டின போதே

---

* 'கௌஸிகன்' எனப்படிக்கவும்.

** இது குறியீட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது.



TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY MADRAS

9 பிரமாணம் பண்ணிக் குடுக்கக் கடவேனாகவும் குடுத்திலேனாகில் இப்பிரமாண இசைவுத்தீட்டே பிரமாணமாவதாகவும் இப்படி சம்மதித்து பிரமாண இசைவுத்தீட்டுக் குடுத்தேன் உடையார் திருக்கோடிகாவுடையார் கோயில் ஆதி

10 சண்டேஸ்வர தேவகன்மிகளுக்கு பாக்கமுடையான் பஞ்சன உடைய பிள்ளையேன் இது பாக்கமுடையான் பஞ்சன உடைய பிள்ளை ஸயிஜ்ஞையான* மைக்கு இவர்மருமகன் குழலூருடையான் எழுத்து இப்படி அறிவேன் னித்த விநோத

11 வளநாட்டு ஆவூர் கூற்றத்து நெடுவாயிலுடையான் சிவலோகன் ஆளவன்தானேந்

---

* கையெழுத்திடமாட்டாமை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | [13] |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1131 |
| ஊர் : | திருக்கோடிகா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 47 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 46 |
| மன்னன் : | விக்கிரமசோழன் | | |

இடம் : திருக்கோடிகாவுடையார் கோயில் மகாமண்டப உட்புற வடமேற்கு மூலையில் உள்ளது.

குறிப்புரை: காவிரித் தென்கரை உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திருவாவடுதுறை உடையார் கோயிலில் உள்ள தபசியான திருவெண்காடு உடையாருக்குச் சட்டிச்சோறு வழங்குவதற்காக நாளொன்றுக்கு ஐந்து நாழி நெல்லுக்கும், திருமடைவளாகத்தில் மருத்துவம் செய்வதற்காக 'வைத்திய விருத்தி' க்கும் நிலக்கொடை அளித்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமாலை மிடைந்து பொன்மாலை திகழப் பாமாலை மலிந்த பருமணித்திரள் புயத்

2 [திருநில]மடந்தையொடு ஜயமகளிருப்ப[த் த]ன்வரைமார்வன் தனதெனப் பெற்றுத்

3 திருமகளொரு தனியிருப்பக் கலைமகள் சொற்றிறம் புணர்ந்த கற்பினளாகி விருப்பொடு நாவகத் திருப்

4 பத் திசை[தொறுந்] திகிரியொடு செங்கோல் நடப்ப அகில புவன முழுதுங் கவிப்பதோர் புதுமதி ே

5 பால வெ[ண்குடை மீமி]சை நிழற்றக் கருங்கலி ஒளித்து வன்பிலத்திடைக் கிடப்பக் குளத்திடைத் ெ

6 தலுங்க வீமன் விலங்கல் மீமிசை யேறவுங் கலிங்கர் பூமியைக் கனலெரி பருகவும் ஐம்படை பருவ

7 [த்து] வெம்படை தாங்கி வேங்கை மண்டிலத்தாங்கினிதிருந்து வடதிசை யடிப்படுத்தருளித் தென்றி

8 சைத் தருமமுந் தவமுந் தானமுந் தழைப்ப வேதமும் மெய்ம்மையு மாதியுகம் போல தலைத்தலை சிறப்ப

9 வந்தருளி [வெலற்கரும்] போர்ப்புலியானை பார்த்திவர் சூட நிறைமணி மகுடமுறைமையிற்சூடி மன்னுயிர்க் கெ

10 ல்லா மின்னுயிர்த் தாய்போல் தண்ணளி பரப்பித் தனித் தனி சிறந்து மண்முழுதுங் களிப்ப மனுநெறி வளர்த்து

11 த்தன் கோயிற் கொற்றவாயிற் புறத்து மணிநா வொடுங்க மு[ரசுகள்] முழங்க விசையமும் புகழும் மேன்மையில்லோ

12 ங்க வாழியூழி மானிலங்காத்த திருமணிப் பொற்றோட் டெழு [பத்தா]ண்டு வருதிறை முன்னே மன்னவ

13 ர் சுமந்த திறைநிரைத்துச் சொரிந்த செம்பொற்குவை[யாற் றன்குல நாயகன் தாண்டவம் புரியுஞ்] செம்பொன்னம்பலஞ் சூ

14 ழ்திரு மாளிகையுங் கோபுரவாசற் கூடசாலை [களு]ம் உலகு வளங் கொண்டொளிவிளங்கு நேமி குலவரை உதைய

15 குன்றமொடு நின்றென பசும்பொன் மேய்ந்த பலிவளர் பீடமும் விசும்பொளி தழைப்ப விளங்குபொன் மேய்ந்து இருநிலந் தழைப்ப விமையவர்களிப்ப பெரிய திருநாள் பெரும்பெயர் விழாவெனும் [உ]யர் பூரட்டாதி உத்திரட்டாதியில் அம்பலம் நிறைந்த*

16 [அற்புதக்] கூத்தனி[ம்]பர் வாழ் வெழுந்தருளுவதற்குத் [திருத்தே]ர்க் கோயில் செம்பொன் வேய்ந்து பருத்திரள் முத்தி[ன்

17 பயில்வ]டம் பரப்பி நிறைமணி மாளிகை நெடுந்திருவீதிகள் திருவளர் பெயரால் செய்து சமைத்தருளிப் பைம்பொன்குவித்த பரிகல முதலாச் செம்பொற் கற்[ப]கத்(த)தொடு பரிச்சின்னமும் அளவில்லாதன ஒளிபெற வமைத்து பத்தா[மாண்டில்] சித்தி

18 ரைத் திங்கள் அத்தம் பெற்ற ஆதித்த[வா ரத்து] திருவளர் மதியின் திரயோதசி பக்கத்து இன்ன பலவும் இனி

19 [து சமைத்தருளி ஒருகுடை நிழல் தலமுழுதும் தழைப்ப செழியர் வெஞ்சுரம் புக சேரலர் கடல்புக அறிதகு சிங்கணரஞ்சி நெஞ்சலமரக் கலிங்கர் திறை[இ]டக் கன்நடர் வேகிட கொ[ங்கர்] ஒதுங்க கொங்கணர் சாய மற்றெத்திசை மன்ன]

20 [ருந்] தத்தமக்கரணென திருமலற்சேவடி உரி[மையிலி]றைஞ்சத் தெரிவயர் திலத மதியாக பதாகை புரிகுழல் மடப்பிடி புனித குணவனிதை திரிபுவன முழுதுடையாள் அந்நெடு மாலாகத்துத் திருமகள் இருந்தென மாதர் மடமயில் பூதலத் தருந்ததி அரணியர் கற்பில் தரணி முழுதுடையாளிவன் திருமார்வத் தருளொடும்மிருப்ப செம்பொன் வீ

21 [ரசி]ங்காசநத்து திரிபுவன முழுதுமுடையா[ளொடும் வீற்றிருந்த]ருளிய கோப்பரகேசி பந்மரான திருபுவன சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரம சோழதேவற்க்கு யாண்டு[ ] ஆவது பங்குனி மாஸத்து ஐஞ்சாத்தியதி செவ்வாய்க்கிழமையும் பெற்ற **பூர்வபக்ஷத்து** ஸத்தமியும் பெற்ற உரோசணி நாள் வடகரை விருதராச பயங்கரவளநாட்டு நல்லாற்றூர் நாட்டு

22 உடையார் திருக்கோடிகா உடையார்கோயிலில் ஆதிசண்டேசுவர தேவர் அருளால் இக்கோயிலில் ஸ்ரீமாயேசுர . . . . மா செய்யும் கரணத்தாநும் . . . . ஸ்ரீ[கார் யஞ்] செய்வானும் . . இவ்வனைவொம் தெந்கரை உய்யக்கொண்டார் வளநாட்டு திரைமூர் நாட்டு உடையார் திருவாவடுதுறை உடையார் கோயிலில் தபஸி திருவெண் காடுடையார்க்கு உடை

23 யார் திருக்கோடிகா [உடையாருக்கு] இந்தக் கொல்லை நிலத் தி[னை] திருத்தி இத்தேவரைக் கும்பிட்டிருக்கும் ஆண்டார்களுக்குச் சட்டிசோறு பிரஸாதித்தருளுகைக்குச் சட்டிசோறுக்கு விஞ்சனம் உட்ப்பட நெல் ஐஞ்ஞாழியாக சட்டி பத்துக்கு நாள் ஒன்றுக்கு நெல்லு தூணிபதக்கு . . . . ழி . . . . திருத்து நிலம் வேலியும் திருமடைவிளாகத்து

24 க்கும் . . . . இருக் . . . . காறர்க்கும் வயித்தியஞ் செய்ய வயித்திய விருத்தியாக வயித்திய . . . . . . த்திரையன் சத்துரு மா[னிய]ன் ஆளப்பிறந்தானுக்கு[ம்*] இவன் வற்க்கத்தார்க்கும் நாள் ஒன்றுக்கு நெல்லு முக்குறுணியாக வந்த நெல்லுக்குத் திருத்து நிலம் அரையும் ஸ்ரீரூ ஸ்ரீரு இ[ன்னிலம்] ஒ[ன்றரை]யும் இத்தெவர் தெவதானம் திருக்கோடிகாவில் நில

25 [ம்] அரையும் கார் . . . . . . . . . . சருப்பெதிமங்கலத்தில் நிலம் வேலியும் ஆக ரூஸ்ரீரு இன்[நிலத்துக்கு] கிழ்பாற்கெல்லை உத்தம சோழன் வாய்க்காலுக்கு மெற்குந் தென்பாற்கெல்லை இவ்வாய்க் காலுக்கு வடக்கும் மெல்பாற்கெல்லை பவித்திர சோழன் வாய்க் காலுக்கு கிழக்கும் வடபாற்கெல்லை . . . . றிக்குறும் னில[த்து]*க்கு தெற்க்கும் ஆக இவ்விசை

26 [ந்]த பெருநான்கெ . . . . . . லம் ஒன்றரையிலும் மாத்தால் எழு கல வரிசையான் நிலம் . . . . . . மாத்தால் அறுகல வரிசையான் நிலம் ஒன்பது மாவும் மாத்தால் முக்கல வரிசையான கொல்லை நிலம் அரை ஆக ரூஸ்ரீரு இன்னிலம் ஒன்றரையும் அந்தராயஞ் சென்று தெவர்க்கு நெல்லு . . . . . . . . யில் இன்னிலம் இவர்

27 . . . . . . திருத்தி இ . . . . சுக்கும் இச்சட்டிச் சோற்றால் நாள் ஒன்றுக்கு தூணிப்பதக்கு இருநாழியாக வந்த நெல்லுக்கும் வயித்திய விருத்தியாக நாள் ஒன்றுக்கு நெல்லு முக்குறுணியாக வந்த நெல்லுக்கும் இன்நிலம் ப[யிரே*]ற்றும்படி திருத்தி சந்திராதித்ய வரை இப்படி செலு[த்]துகைக்கு கல்லிலுஞ் செ[ம்பிலும் வெ]ட்டிக் கொள்ளக் கடவதா

28 க உடையார் திருக்[கோடிகா]வுடையார் ஆதிசண்டேஸ்வர தேவர் அருளால் இன்நிலம் விட இப்பிரமாண [இசைவு தீட்டு] குடுத்தோம் இத்தபஸி திருவெண்காடுடையார்க்கு இவ்வனைவொம் இவை கொயிற் கணக்கு கண்ணமங்கலமுடையார் இரண[கண்ட]ப்பிச்சன் எழுத்து இவை தேவகந்மி கவுதமன் நாராயணன்

29 எழுத்து இவை பன்மாயெஸ்வரக் கண்காணி அரயதேவன் எழுத்து இவை மாதவபட்டஸ்ய இப்படி அறிவேன் பொற்கோயிற் பட்டநேன் எழுத்து இப்படிக்கு இவை பார்த்துவாசி திரு நாகேஸ்வரமுடையான் உடைய . . . எழுத்து இவை [உத்தம] சோழ வாச்சிய மாராயன் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 48 |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1117 |
| ஊர் : | திருக்கோடிகா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 40 / 1931 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 47 |
| மன்னன் : | முதலாம் குலோத்துங்கன் | | |

இடம் : திருக்கோடிகாவுடையார் கோயில் மகாமண்டப வடசுவரில்உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் தொடக்கப்பகுதி மட்டுமே உள்ளது. விருதராஜ பயங்கரவளநாட்டு நல்லாற்றூர் நாட்டு அகர பிரமதேயத்து ஸ்ரீ ராஜேந்திரச்சோழச் சருப்பேதி மங்கலமும் அதன் உட்கிடையூரான இராஜேந்திரசோழச் சேரியுமான நாட்டுப் பிரிவுகள் மட்டுமே உள்ளன.

கல்வெட்டு :

1 திரிபுவந சக்கரவத்திகள் ஸ்ரீ குலோ

2 த்துங்க சோழ தேவற்கு யாண்டு ௪௰௮

3 ஆவது விருதராஜ பயங்கர வளநாட்டு ந

4 ல்லாற்றூர் நாட்டு அகரபிரமதேயம் ஸ்ரீ ரா

5 ஜேந்த்ரசோழ சதுப்பேதி மங்கலத்து ராஜே

6 ந்த்ர சோழசேரி ஒ . . . . வேதவ்யாஸ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | கும்பகோணம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 14-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருக்கோடிகா | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 58 / 1930-31 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 48 |
| மன்னன் : | — | | |

இடம் : திருக்கோடிகாவுடையார் கோயில் கோபுர வாயிலின் இடப்புறம் உள்ளது.

குறிப்புரை : பதினான்காம் நூற்றாண்டு எழுத்தமைதியில் தோன்றும் இப்பாடற் கல்வெட்டு புதுவாபுரித் தலைவனும் (சேதிபன்) பாரிப்பிள்ளை மகனுமான சடையன் என்பானைப் புகழ்ந்து பாடும் பாடலாய் அமைந்துள்ளது.

இவன் உலகம் வாழவும், ஏழையரும், புலவோரும், மறையோரும் சிறக்கப் பெரும் வள்ளலாகத் திகழ்ந்தான் என்றும், அவன் சொல் தவறாதவன் என்றும் போற்றப்படுகிறான்.

கல்வெட்டு :

1 பெரும்பார் தழைக்க வறியோர் பி[ழை]
2 க்கப் பெருங்கவிதை வரும் பாவலரு ம
3 றையோரும் வாழ மனமகிழ்ந்து தரும்பா
4 ரிப் பிள்ளைப் பெருமாள் குமாரன் சதம் பொ[ன்]
5 னுந் திரும்பா மொழிச்சடையன் பு[து]
6 வாபுரிச் சேதிபனே உ சிவதேசி

[பெரும்பார் தழைக்க வறியோர் பிழைக்கப் பெருங்கவிதை
வரும்பா வலருமறை யோரும் வாழ மனமகிழ்ந்து
தரும்பா ரிப்பிள்ளைப் பெருமாள் குமரன் சதம்பொன்
திரும்பாமொழிச்சடையன் புதுவாபுரிச் சேதிபனே]